பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 06 சனிக்கிழமை (19.04.2003) தொலைபேசி- 2223378 ஒலி 121

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்



பி.ஜே.பர்னான்டோ

இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

## மூதூரில் கலவரம் தொடர்கிறது

# கட்டைபறிச்சானில் கிரனைற் வீச்சு

# இரண்டு தமிழர் பலி; 7பேர் காயம்

## பாதுகாப்பு அமைச்சரின் சமரச முயற்சி தோல்வி

(நமது மூதூர் நிருபர்)

**மூதூர் பாலத்தோப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்றைய தினம் அங்கு சென்ற அமைச்சர் மட்டக்குழுவினர் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்விகண்டன. இதனை அடுத்து மூதூர் கட்டைபறிச்சானில் இடம்பெற்ற கிரனைற் தாக்குதலில் இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.**

மூதூர் பகுதியில் நேற்று முன்தினம் தமிழ், முஸ்லிம் மக்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து அங்கு சுமுகநிலையை ஏற்படுத்துமுகமாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, மகிநதசமரசிங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ ஆகியோருடன் இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகள் அப்பகுதிக்கு நேற்று விஜயம் செய்துள்ளனர்.

மூதூருக்கு நேற்று முற்பகல் விஜயம் செய்திருந்த அமைச்சர்கள் இராணுவ கடற்படை உயர் அதிகாரிகள் சகிதம் கட்டைபறிச்சான் படைமுகாம் பகுதியில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இவ் ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களான ஆர். சம்மந்தன் ஏ. துரைரட்ணசிங்கம், போரநிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் கே. சிவபாலன்,

(10ம் பக்கம் பார்க்க)

## மூதூர் கலவரத்தைத் தணிக்க கண்காணிப்புக் குழு முயற்சி

(திருகோணமலை)

மூதூர்ப் பகுதியில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே இடம்பெற்ற மோதல்களையடுத்து விடுதலைப் புலிகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களையும் ஒன்று சேர்த்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தும் முயற்சியில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு ஈடுபட்டுள்ளது.

தமிழ் முஸ்லிம் மக்களிடையே தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் மோதல்களைத் தணிப்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தித்தருமாறு முஸ்லிம் காங்கிரஸ் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்தபோதும் அதற்குச் சாதகமான பதிலேதும் கிடைக்கவில்லையென காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ள அதேவேளை இதற்கான சாதகமான பதில் விடுதலைப்புலிகளிடம் இருந்து இன்று கிடைக்கலாம்மென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(வ)

## பிரதேச சபைத் தலைவர் நேற்று சுட்டுக் கொலை

### அக்கரைப்பற்றில் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை ஆலயடிவேம்பு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் நேற்று முற்பகல் 11.45மணியளவில் அக்கரைப்பற்று நகரில் வைத்து இனந்தெரியாத மூவர் கொண்ட குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஜெகதீஸ் என்று அழைக்கப்படும் மாரிமுத்து இராசலிங்கம் (வயது-40) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

தனியார் புகைப்பட நிலையம் ஒன்றின் முன்னால் பிரஸ்தாப நபர் நின்றுகொண்டிருந்த போது அங்கு

(10ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களை பாதுகாக்க தவறின் அரசுக்கான ஆதரவு விலக்கப்படும்

### அமைச்சர் ஹக்கீம் எச்சரிக்கை

(நமது நிருபர்)

மூதூர்ப் பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலைக்கான முழுப்பொறுப் பயும் ஐக்கிய தேசிய முன்னணி அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் மூதூர் மக்களின் பாதுகாப்பையும் அரசு உறுதிப்படுத்தத் தவறினால் அரசாங்கத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் தற்போது அளித்துவரும் ஆதரவை மறுபரிசீலனை செய்ய வேண்டிவரும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மூதூர் பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றநிலையை அடுத்தே கட்சிகளின் உயர் பீடத்தின் தீர்மானங்களின் பின் அமைச்சர் ரவூப் ஹக்கீம் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தார். அச்செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற் கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் அவர் தொடர்ந்து பேசுகையில் இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் மக்களது உயிர்கள் பறிக்கப்படுவதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்நிலை

(10ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் இன்று குறைகேள் நிவர்த்தி சேவை

### அமைச்சர் மகேஸ்வரன் கலந்துகொள்வார்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதி மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அதிகாரிகள் கலந்துகொள்ளும் அரசநிர்வாக குறைகேள், குறைநிவர்த்தி சேவை இன்று முற்பகல் பத்து மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்து கலாச்சார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இக் குறைகேள் சேவையில் யாழ் அரச அதிபர் எஸ். பத்மநாதன், தென்மராட்சிப்

(10ம் பக்கம் பார்க்க)

## கூட்டணிஎம்.பிகள்-புலிகள் கிளிநொச்சியில்இன்றுசந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கப் பேச்சு நடக்தவுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவச் செயலகத்தில் முற்பகல் 10மணிக்கு இச் சந்திப்பு இடம்பெற

(10ம் பக்கம் பார்க்க)

## கனகலிங்கம் தலைவராக தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய மற்றும் நுகர்ச்சி கூட்டறவுச் சங்கங்களின் இயக்குனர் சபைத் தெரிவு நேற்று பிற்பகல் 3மணிக்கு கூட்டறவு சமாச மண்மடபத்தில் நடைபெற்றது.

இயக்குனர் சபைத் தலைவராக ப. கனகலிங்கமும் உப தலைவராக ம. சிவசுப்பிரமணியமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதேவேளை கூட்டுறவு உதவி ஆணையாளரினால் ஜெ. சுஜீந்திரன், து. சுவேந்திரராசா ஆகியோர் பணிபாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(இ)

## அன்னை பூபதியின் 15ம் ஆண்டு நினைவு தமிழர் தாயகத்தில் இன்று அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழ விடுதலைக்காகத் தன்னுயிரை ஆகுதியாக்கிய அன்னை பூபதியின் பதினைந்தாம் ஆண்டு நின்னவு நாள் இறுதி நிகழ்வுகள் இன்று தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வையொட்டி தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு வீதிகள் பொது இடங்கள் எங்கும் தூய்மைப்படுத்தப்பட்டு நினைவுப் பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் எங்கும் அடையாள உண்ணாவிரதங்களும் கலை நிகழ்வுகளும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அடையாள உண்ணாவிரதமும் அஞ்சலி நிகழ்வும் இன்று முற்பகல் ஒன்பது மணிக்கு ஆரம்பமாகி மாலை ஆறு மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அன்னை பூபதி 1988ம் ஆண்டு பங்குனி மாதம் 19 ஆம் திகதி மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலய வீதியில் உண்ணா நோன்பிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-7)

# மூதூர் சம்பவங்களுக்கு என்ன காரணம்? கண்டறியத் தயாராகிறது க. கா. குழு

(கொழும்பு)

மூதூர்ப் பகுதியில் கடந்த சில நாட்களாக இடம்பெற்ற சம்பவங்களுக்குரிய காரணங்களை கண்டறிவதற்கு இலங்கை யுத்தநிறுத்தத் கண்காணிப்புக் குழு தயாராகி வருவதாக அதன் பேச்சாளர் டுல்கிஷன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிப் பிரதிநிதிகளுககும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றதாக டுல்கிஷன் மேலும் தெரிவித்துள்ளார்.

மூதூருக்கு அண்மையில் பாலத்தோப்பூருக்கும் மல்லிகைத்தீவுக்கும் இடையில் தமிழ் - முஸ்லிம் குழுக்களிடையே நேற்று முன்தினம் மோதல் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது இருவர் உயிரிழந்துள்ளதுடன் 7 பேர் படுகாயமடைந்தனர் அத்துடன வீடுகள், கடைகள் உட்பட கட்டடங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியெங்கும் நேற்றுமுன் தினம் முதல் பதற்ற சூழ்நிலை நிலவி வருவது தெரிந்ததே.

இதேவேளை, இந்நிலைமையை கட்டுப்படுத்தவும், பார்வையிடவும் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன அவ்விடத்துக்கு நேரில் விஜயம் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தமிழ் மொழி புறக்கணிப்பு

(கல்வயல்)

வடக்கு-கிழக்கு மாகாண சபைப் பணிப்பாளர்களுக்கான மனிதவள தரவுத்தளப் படிவம் மேற்படி மாகாண சபையால் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

அரச கரும மொழியாக தமிழ் மொழி பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் இவ்வாறான மொழிப் புறக்கணிப்புகள் இடம்பெறுவது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (உ-36)


## சிறுவிளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சுன்னாகம் வடக்கில் கே.கே.எஸ். வீதிக்கு சற்றுத் தொலைவில் $2^1/_2$ பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: திருமதி பு.மணி அம்மா நடராசா, வருசப்புலம், சுன்னாகம் வடக்கு, சுன்னாகம். (திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கு அருகில் உள்ள ஒழுங்கை) (6656)


# ஏழாம் சுற்று சமாதானப் பேச்சு திட்டமிட்டபடி தாய்லாந்தில் நடக்கும்

## பேணாட் குணதிலக அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான 7ஆவது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி தாய்லாந்தில் நடைபெறும் என சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேணாட் குணதிலக அறிவித்துள்ளார்.

சார்ஸ வைரஸ் கிருமித் தாக்கம் காரணமாக இப்பேச்சுவார்த்தைகள் வேறொரு இடத்துக்கு மாற்றப்பட்டலாம் என பல தரப்புகளின் மத்தியில் இருந்தது வெளியிடப்பட்ட ஊகங்களுக்கு பதில் அளித்து பேசும் போதே பேணாட் குணதிலக மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 29 ஆம் திகதி நடத்தத்திட்டமிட்டிருந்த 7வது சுற்றுப் பேச்சு வார்த்தை சார்ஸ் அபாயம் காரணமாக நோர்வே அல்லது யப்பானுக்கு மாற்றப்படலாம என பரலவாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சார்ஸ் வைரஸ் நோய் காரணமாக தாய்லாந்தில் கடந்த வாரம் 2 பேர் பலியானதுடன் 7 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (உ-8)

# கூட்டணி யாழ். அலுவலகத்தில் மிக முக்கிய கலந்துரையாடல்

## மாவையும் பங்கேற்கிறார்

(தென்மராட்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு மே தினம் தொடர்பான கூட்டமும், தந்தை செல்வாவின 26வது நினைவு பேருரை தொடர்பான கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது.

கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்களான சூ.செ. குலநாயகம, பொ. கனகசபாபதி ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நீண்ட இடைவெளியின் பின் கூட்டணியின் யாழ். அலுவலகததில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவிருக்கிறார் என்ற வகையில்,

இதேவேளை,இன்றைய அரசியல நிலை, கூட்டணியின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்த முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இம்முக்கிய கலந்துரையாடலுக்கு 500 வரையான கூட்டணியின் ஆதரவாளர்கள் மற்றும் அமைப்பாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

இது இவ்விதமிருக்க, கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரி நாட்டில் இல்லாத வேளையில் ஒழுங்கு செய்யப்பட்டுளளது என்ற வகையிலும், இன்று இடம் பெறவுள்ள விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின் பின் இடம் பெறுகின்றது என்ற வகையிலும் இக் கலந்துரையாடல் பலரதும் கவனத்தையும் ஈர்த்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-77-43)

# மகாத்மா காந்தியின் மனத்தில் உதித்த அகிம்சைப் போருக்கு அர்த்தம் தந்த அன்னைபூபதி



அமைதிப்படைப் என்ற பெயரில் தமிழீழ மண்ணில் கால் பதித்த இந்திய இராணுவத்தினரின வல்லாதிக்க அராஜக நடவடிக்கைகளை எதிர்த்து மட்டக்களப்பு அன்னையர் முன்னணியைச் சேர்ந்தவாகள் மட்டககளப்பு மாமாங்கப் பிள்ளையார்ஆலய முன் வீதியில் உண்ணாவிரதப் போராட்டம்ஆரம்பித்திருந்தனர். இந்தப் போராட்டத்தை முறியடிப்பதற்கு இந்திய அரசு எத்தனையோ நடவடிக்கைகள் பிரயத்தனங்களை மேற்கொண்டது. ஆயினும் அதில் வெற்றி பெறமுடியவில்லை. ஈற்றில் போராட்டம் சாகும் வரை உண்ணாநோன்பாக மாறிவிட்டது.

**சாகும்வரை உண்ணாநோன்பு**

19-3 -1988இல் அன்னை பூபதிகணபதிப்பிள்ளை போரை நிறுத்தவேண்டும்விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்ற முக்கிய கோரிக்கைகளை முன் வைத்து சாகும்வரை உண்ணா நோன்பை ஆரம்பித்தார். நான் எனது சொந்த எண்ணத்தின்பேரிலேயே எமது கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாநோன்புமேற் கொளளுகிறேன். எவரும் என்னைக காப்பாற்றவோ தூக்கிச செல்லவோ அனுமதிக்கக்கூடாது என்று கடிதம் எழுதிவிட்டே உண்ணா நோன்பை மேற்கொண்டார்.

## இன்று 15வது நினைவு தினம்

எம்மைக்காக்க வந்த இந்திய அமைதிப்படைஸ்ரீலங்கா இராணுவத்தையும் விஞ்சியகொடுமைகளைச்செய்யும் நிலையைத் தடுக்கலாம் என்று மன உறுதியுடனே இந்தப்போரை ஆரம்பித்துளேன். தியாகிதிலீபனின் வழியில் வீரச்சாவினை ஏற்கத் தயங்கேன் என்று சபதமெடுத்தார்.

**வரலாறு படைத்தவர்**

ஒரு சாதாரண தாயின் அசாத்தியதுணிவையும் அலாதியான தேசப்பற்றையும் தர்மத்தின் குரலாக தனித்து ஒரு சாம்ராஜ்யத்தின் அதர்மத்தை எதிர்த்த பான்மையையும் யாரும் மறந்து விடமுடியாது. 31 நாள்கள் அறப்போர் நடத்தி 19.04.1988 செவ்வாய் காலை 8.45 மணிக்குத தன்னு யிரைத் நீத்து தமிழீழத்தின் தலையாய தியாகிகளில் ஒருவராக மதிக்கும் நிலை அடைந்துள்ளார். சாவுக்கு அஞ்சாத மனோதிடம்படைத்தவர்கள் எதையும சாதிக்கும் வல்லமை படைத்தவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டி இன்று 15வது ஆண்டு நினைவு நாளில் தமிழ் மக்களின் உள்ளங்களில் நிழல் ஆடுகின்றார் தமிழுள்ள வரை அவர் எம் உள்ளங்களில் வாழ்வார் என்று வெந்திடும் உள்ளத்து மலர்களால் அஞ்சலி செய்கின்றோம்.

**-தமிழன்**

# கண்டி சிறுவர் பட்டறையில் 21 யாழ். சிறுவர்கள் பங்கேற்பர்

(திருநெல்வேலி)

சிறுவர் தொடர்பு (கிட்) அமைப்பு எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை கண்டியில் நடத்தவிருக்கும் எதிர்காலம குறித்த சிறுவர்களின் சிந்தனைககான 4 நாள் பட்டறையில் யாழ்ப்பாணத்துச் சிறுவர்களும் பங்கேற்றகவுள்ளனர்.

யாழ. மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியம், இதில் கலந்துகொள்ளும் 21 பேர் கொண்ட சிறுவர் குழுவை அங்கு அழைத்துச் செல்லவுள்ளது.

இவர்களுடன் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் ஐவரும் அங்கு செல்லவுள்ளனர்.

மேற்படி பட்டறையில் நாட்டின பலபாகங்களிலும் இருந்து சிறுவர்கள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-43)

# மனித உரிமைகளை பாதுகாக்க ஐவர் கொண்ட பிராந்தியக் குழு

(தென்மராட்சி)

மனித உரிமைகள் ஆணைக் குழு, யாழ். மாவட்டத்தில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான ஆற்றலை வலுப்படுத்தும் பொருட்டு யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதிகளாக ஐந்துபோர் கொண்ட பிராந்தியக் குழு ஒன்றினைத் தேர்ந்தெடுக்கவுள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் இக்குழுவின் முதலாவது சந்திப்பு மிக விரைவில் இடம்பெறவிருப்பதாக மனிதஉரிமைகளை மேம்படுத்தும் செயறதிட்டத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளரான ஜனாப். எம். சீ. எம். இக்பால் தெரிவித்துள்ளார். (உ-77)

# பாதாள உலகக் கோஷ்டி தலைவரும் சகாக்களும் கைது

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டி ஒன்றின தலைவரையும் அவரின் சகாக்கள் ஐவரையும் கடவத்தைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து முச்சக்கரவண்டிகள், இலத்திரனியல் உபகரணங்கள், வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் அவற்றுக்குரிய ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இக்குழுவினர் நீர்கொழும்பு ஜாஎல, அழுத்கம சிவிலப்பெட்டி ஆகிய பிரதேசங்களில் இடம் பெற்ற பாரிய கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டவர்கள் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-8)

# வணிகர் கழகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சென்ற இரு கிழமைகளும் புத்தாண்டுதினத்தை முன்னிட்டு வர்த்தகநிலையங்களை ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறைதினங்களில் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிஅளிக்கப்பட்டபோதும் நாளை தொடக்கம் ஞாயிறு மற்றும விடுமுறை தினங்கள் வர்த்தக நிலையங்களும் பூட்டி சகல வர்த்தக நிலையங்களும தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்என யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. (உ)


## gtz கட்டிடப் பொருட்கள் விநியோகத்திற்கான கேள்வி அறிவித்தல்

எமது புனர் நிர்மாணத்திட்டத்தின் கீழ் அடுத்த கட்ட வீடுகள் புனரமைப்பு வேலைகளுக்கு தேவைப்படும் கட்டிடப் பொருட்கள் விநியோகத்திற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

தேவைப்படும் கட்டிடப் பொருட்களும் விநியோகிக்கப்படவேண்டிய பிரதேச செயலர் பிரிவுகளும் பின்வருமாறு:

| பிரதேச செயலர் பிரிவு | வீடுகளின் எண்ணிக்கை | தேவைப்படும் பொருட்கள் மணல் (கியுப்) | கண்ட கல் (கியுப்) | கிறசர் சல்லி 3/4" (கியுப்) |
|---|---|---|---|---|
| சாவகச்சேரி | 175 | 700 | 438 | 350 |
| மருதங்கேணி | 175 | 700 | 438 | 350 |
| சண்டிலிப்பாய் | 50 | 200 | 125 | 100 |
| சங்கானை | 50 | 200 | 125 | 100 |
| பருத்தித்துறை | 50 | 200 | 125 | 100 |
| வேலணை | 50 | 200 | 125 | 100 |
| உடுவில் | 50 | 200 | 125 | 100 |
| கோப்பாய் | 50 | 200 | 125 | 100 |
| நல்லூர் | 50 | 200 | 125 | 100 |
| ஊர்காவற்றுறை | 50 | 200 | 125 | 100 |
| தெல்லிப்பழை | 50 | 200 | 125 | 100 |

மேற் குறிப்பிடப்பட்ட பொருட்களை விநியோகிக்கக் கூடிய நிறுவனம் அல்லது தனிப்பட்ட நபர்கள் 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலுள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவத்தில் கேள்விகளை 30.04.2003 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக தபாலிலோ அல்லது நேரடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

GTZ ~ யாழ். புனரமைப்புத் திட்டம்,
472, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 - 222 2635
021 -222 6011

வெளிக்கள குழுத்தலைவர்

(C/6058)

## நூல்வெளியீடு

(காரைநகர்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் இளையதம்பி தயானந்தா எழுதிய 'வானலைகளின் வரிகள்' நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் 25ஆம் திகதி கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-246)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம், யாழ்.மாவட்ட தாச்சிச்சங்கத்தின் அனுசரணையுடன் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவரும் மாபெரும்தாச்சிச்சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்றில் இன்று பி.ப. 4.45 மணிக்கு மல்வம் ஞானப்பிரகாச விளையாட்டுக்கழகமும், சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் பங்குபற்றவுள்ளன. (உ-10)

### இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு

# அரசியல் தீர்வில் உள்ள அக்கறை குறித்து கனடா கவனம் செலுத்தி வருகிறது

### வாஷிங்டன் மாநாட்டில் கனடா ராஜாங்கச் செயலர்

(வாஷிங்டன்)

ஜூன் மாதம் ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டிருக்கும் அதேவேளை,சமாதான பேச்சுக்களில் தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்கனவே உடன்பாடு ஏற்பட்டுள்ள விடயங்களில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் முக்கியமாக மனித உரிமைகள் விவகாரம் மற்றும சமஷ்டி அமைப்பொன்றினுள் ஒரு அரசியல் தீர்வு ஏற்படுத்துவதில் சம்பந்தப்பட்டவர்களுக்குள் இருக்கும் பற்றுறுதி,திண்மை என்பவை பற்றி கனடா அக்கறையுடன் இருக்கிறது என்று கனடாவின் ராஜாங்க செயலாளர் கில்கோர் வாஷிஙடனில் நடைபெற்ற முன்னோடி மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியும் சமாதானமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை, என்பதையும் முழுமையான சமாதான விடயத்தில் வாஷிங்டன் மாநாடு காத்திரமானது என்பதையும் கனடா அங்கீகரிப்பதாகவும் தெரிவித்த அவர்,இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக சமஷ்டி முறையே அமையும் என்றும், அதனை இலங்கையின் தனியான அம்சங்களுக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்றும் எடுத்துக்கூறினார்.

மேலும் மாற்றுத்தீர்வாக சமஷ்டி முறையை பாசலிக்கும்பொழுது ஏற்படக்கூடிய தொழில்நுட்ப ஆலோசனைகளை கனடா தொடர்ந்தும் வழங்கி வரும் என்பதையும் கனடாவின் ராஜாங்க செயலாளர் உறுதி செய்தார்.

இரு தரப்பினருக்குமிடையே நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான திட்டம் ,இப்போது நடைபெற்று வரும்பேச்சுக்களில் எடுக்கப்படும் தீர்மானங்களின் அமுலாக்கத்திற்கான திட்டங்கள்,மனித உரிமைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலுள்ள பற்றுறுதி, ஜனநாயக அடிப்படையிலான பல கட்சி முறை, நல்லாட்சி என்பனவற்றில் இரு தரப்பினருக்குமுள்ள ஆர்வ நிலைப்பாடு என்பவற்றை அறிவதில் கனடா அரசாங்கம் அககறையுடனிருக்கின்றது என்றும் முனனோடி மாநாட்டில் அவர் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார். (உ)

# காணாமல் போனோர் குறித்த 5ஆம்கட்ட விசாரணை நிறைவு

### 6ஆம் கட்டம் மே முற்பகுதியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் 1996, 1997ஆம் ஆண்டுகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஐந்தாவது கட்ட இறுதி விசாரணை நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம் பெற்றது.

கடந்த 4 தினங்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்துவிசாரணைகளை நடத்தி வந்த காணாமல் போனோர்குறித்த விசேட விசாரணைக்குழுவின் இணைப்பாளர் இக்பால் தலைமையிலான நால்வர் ஏற்கனவே அழைப்புவிடுத்த 95பேர் தொடர்பாக விசாரணைகளை நடத்தி தரவுகளைச் சேகரித்துள்ளனர்.

விசாரணைகளை முடித்துக் கொண்டு நேற்று கொழும்பு பயணமாகிய இக்குழு மீண்டும் அடுத்த மாதம் முற்பகுதியில் ஆறாம்கட்ட விசாரணைகளை நடத்த யாழ். வரும எனத் தெரிவிக்கப்படுகிறது.(உ-4)

## பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் குடிநீர் விநியோகத் திட்டம்

### அபி.நிறுவன ஆஸி. கிளை நிதியுதவி

(தென்மராட்சி)

தென்மராட்சி அபிவிருத்தி நிறுவன அவுஸ்திரேலியக் கிளையின் நிதியுதவியுடன் தென்மராட்சியிலுள்ள யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட 6 பாடசாலைகளில் குடிநீர்விநியோகத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கென அவுஸ்திரேலியக் கிளையினர் 2 இலட்சத்து 50ஆயிரம்ரூபாவை தென்மராட்சி மக்கள் நலச்சேவை சங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

கைதடி ,நாவற்குழி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்,மடடுவில் கமலாசனி வித்தியாலயம்,அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,மநதுவில் றோமன கத்தோலிக்க கலவன் பாடசாலை ஆகிய ஆறு பாடசாலைகளிலுமே இக் குடிநீர் விநியோகத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இபபாடசாலைகளுக்கு நீர் இறைக்கும்இயந்திரங்கள்,குடிநீர் விநியோகத்துக்கான குழாய் வசதிகள் என்பன வழங்கப்படவுள்ளதாக நலச்சேவைகள் சங்கத்தின் இணைச் செயலாளரான இ. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (உ-77)

# போருக்கான சந்தர்ப்பங்கள் புலிகள் புறம் தள்ளி வருகின்றனர்

### கிருஷ்ணபிள்ளை எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடடில் இனிமேல் யுத்தம் ஏற்படாது,யுத்ததிற்கான பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போதிலும்தமிழீழ விடுதலைப்புலிகள் அதனை தட்டிக் கழித்துள்ளார்கள்.

அரசாங்கத்துக்கும்,தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சு வார்த்தையினை குழப்ப முயலுவோரை மக்கள் துரோகிகளாகவே கணிக்கவேண்டும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. கிருஷ்ணபிள்ளை பழுகாமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நூலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தேசிய பாராளுமன்ற உறுப்பினர் ஞா. கிருஷ்ணபிள்ளை தமிழீழ விடுதலைப்புலிகளின் பொறுமையை பலவீனம் என எவரும நினைக்கக்கூடாது.

தமிழ் மக்கள் அனைவரும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்பதற்கான வழியையே பெரும்பான்மையின மக்களிடம் தமிழீழ விடுதலைப்புலிகள் கேட்கின்றனர்.

இதனை ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தி வருகின்றது என்றார்.

இநநிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யனும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். (உ-8)

### நெருப்புக் காய்ச்சல் பரவுகிறது

(கல்வயல்)

கல்வயல் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் நோய் மிக வேகமாகப பரவி வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நெருப்புக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்கள் பலர், யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இப்பகுதியில் மிகுந்த குடிநீர் பிரச்சினை நிலவு வதும் குறிப்பிடத்தக்கது. (உ-36)

### ஹலோட்ரஸ்ற் நிறுவனத்திடம்

# கண்ணிவெடிகளை அகற்றுமாறு கமக்காரர்கள் வேண்டுகோள்

(தென்மராட்சி)

மட்டுவில் மானாவளை வயல்ப் பிரதேசத்தில் கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகளை அகற்றிஅப்பகுதி விவசாயிகளின் விவசாயச் செய்கைக்கு ஊக்கமளிக்கும் வண்ணம் மானாவளைமோகனதாஸ் சனசமூக நிலையம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கண்ணிவெடி அகற்றும ஹலோட்ரஸ்ற் நிறுவனத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையத்தின் செயலாளரால் இதுபற்றிஅனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் ,

கடந்த 2000ஆம் ஆண்டு முதல் மானாவளை பிரதேசத்தில் உள்ள வயல் உரிமையாளர்கள் கண்ணிவெடி,மிதிவெடி ஆபாயம் காரணமாக தமது விவசாயச்செய்கையை மேற்கொள்ளாமல் இருந்துவருகின்றனர்.

இதன் காரணமாக இப்பகுதி விவசாயிகள் ,தமது ஜீவனோபாயத்துக்கு மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர். இவர்களின் வயல்களில் காணபபடும் கண்ணிவெடி ,மிதிவெடிகளை விரைவில் அகற்றித்தருமாறு கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

அத்துடன்,மோகனதாஸ் சனசமூக நிலையத்தின விளையாட்டு மைதானத்திலும் இதேபோன்ற அபாயங்கள் இருப்பதால் இக்கிராமத்தில் விளையாட்டுத்துறை வளர்ச்சியடையாமல் இருந்து வருகின்றது எனக் குறிப்பிட பட்டுள்ளது. (உ-77)

## மீட்கப்பட்ட சைக்கிள்களை ஆதாரம் காட்டிப் பெறலாம்

### யாழ்.பொலிஸார் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கள்வர் வசமிருந்து மீட்கப்பட்ட 9 சைக்கிள்கள் உரியவர்களின் பொறுப்பேற்றல் கருதி யாழ். பொலிஸ நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. 55537693,11114355,5579783,R.C.1273,R.J. 1255,5712C587, 55792816,56C 53243,57733774 ஆகிய இலக்கங்களையுடைய மீட்கப்பட்ட சைக்கிள்களை உரியவர்கள் தகுந்த ஆதாரங் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

6 மாதகாலத்தினுள் மேற்படி சைக்கிள்களை மீட்கத்தவறுமிடத்து அவை யாழ். நீதிமன்றத்தினால் ஏலத்தில் விற்கப்படும் என யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அறிவித்துள்ளார். (உ-7)

### குடிநீர் வழங்கல் திட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆரம்ப பாடசாலைக்கு குடிநீர்வழங்கும் திட்டத்தினை மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 50 ஆயிரம் ரூபா செலவில் அமுல்படுத்த முடிவு செய்துள்ளது.

இதன் ஆரம்பகட்டவேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப் பட்டன. (உ-77)









சவுதி அரேபிய நிவாரண அமைப்பு பிரதிநிதிகள் நேற்று நாவலர் வீதி புதிய பள்ளிவாசலில் வைத்து மீளக்குடியேறிய முஸ்லிம்களுக்கு உதவு பொருட்களை வழங்கியபோது பிடிக்கப்பட்ட படங்கள். படங்கள்: க.பவன்

# பேரழிவு ஆயுதமற்ற பிரதேசமாக வளைகுடாவைப் பிரகடனம் செய்க

## ஐ. நா பேரவையில் சிரியா பிரேரணை

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கில் வளைகுடாப் பிரதேசத்தை பேரழிவு ஆயுதங்களற்ற பிரதேசமாகப் பிரகடனம் செய்வதற்கான நகல் தீர்மானம் ஒன்றினை சிரியா ஐ.நா பேரவைக்கு முன்மொழிந்துள்ளது.

சிரியா பேரழிவு ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருப்பதாக அமெரிக்கத் தலைவர்கள் குற்றஞ்சாட்டி வருவதுடன் ஈராக்கிற்கு அடுத்தபடியாக சிரியா மீது அமெரிக்கா போர் தொடுக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் கருதப்படும் வேளையில் இவ்வாறான ஒரு தீமானத்தை முன்மொழிந்திருப்பது அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

### பவல் சிரியா விஜயம்

அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவல் மிகவிரைவில் சிரியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

தனது மத்திய கிழக்கு நாடுகளுக்கான விஜயத்தின் போது பவல் சிரியாவுக்கும் விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரபு, இஸ்ரேல் சமாதான நடவடிக்கைகளை அவதானிக்கும பொருட்டு இவர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எனினும் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாகவும், சதாம் ஹுசைனுக்கு ஒத்துழைப்பு வழங்கியது தொடர்பாகவும் சிரியாவின் கொள்கை மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் கொலின் பவல் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சிரியாவில் ஆயுதப் பரிசோதனை நடத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் சிரியா அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கு தாம் முன்வைத்த ஆலோசனைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக எகிப்துக்கு விஜயம் செய்துள்ள சிரிய வெளிவிவகார அமைச்சர் பாருக் அல்ஷரா தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகள் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதை அல்லது உறுதி செய்வதை தடுக்கும் வகையிலான சர்வதேச ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு திட்டத்தை சிரியா ஏற்கனவே முன்மொழிந்துள்ளது.

சிரியா பேரழிவு ஆயுதங்கள் வைத்திருப்பதாக அமெரிக்கா தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருவதை சிரியா வன்மையாகக் கண்டித்தும் மறுத்தும் வருகின்றது.

### பின்னணியில் இஸ்ரேல்

சிரியா மீதான அமெரிக்க நெருக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாக எகிப்து ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஒஸாமா அல்பாஸ் கூறியுள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு நாடுகளில் இருந்து வெளியேற இஸ்ரேல் தயாராக வேண்டும் என்றும் அவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் வலியுறுத்தியுள்ளார்.

### அவுஸ்திரேலிய தடையை நீக்கியது

ஈராக்கில் யுத்தம் முடிவுக்கு வரும் நிலையில் அயல் நாடுகளான கட்டார், ஐக்கிய அரபுக் குடியரசு, ஜோர்தான், பஹ்ரைன் ,சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு அவுஸ்திரேலியப் பிரஜைகள் செல்வது தொடர்பாக விடுத்திருந்த எச்சரிக்கையை அவுஸ்திரேலிய அரசாங்கம் விலக்கிக் கொண்டுள்ளது.

எனினும் ஈராக்கிற்கும் ஜேர்மனுக்கும் செல்வதை தவிர்த்துக் கொள்ளும் அதேவேளை, ,ஈரான் லெபனான், சிரியா மற்றும் குவைத்துக்கான பயணங்களையும் மேற்கொள்ள வேண்டாம் என்று அவுஸ்திரேலியப் பிரஜைகள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். (பி-2)

### மலேசியாவில் தடை நீக்கம்

(கோலாலம்பூர்)

சார்ஸ் பாதித்த நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மலேசிய அரசு விலக்கிக் கொண்டது.

சீனா, ஹொங்கொங்,தைவான், வியட்நாம் கனடா ஆகிய நாடுகளிலிருந்து மலேசியா வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கடந்த வாரம் தடை விதிக்கப்பட்டது. தற்போது அந்த நாடுகளில் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதால் தடையை விலக்கிக் கொள்வதாக கடந்த வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது. (பி)

## ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களைக் கண்டு பிடிக்க அமெரிக்கா ஏற்பாடு

### 1000 பேர் கொண்ட நிபுணர் குழுவை அங்கு அனுப்புகிறது

(வாஷிங்டன்)

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளனவா என்பதைக் கண்டு பிடிக்க 1000 பேர் கொண்ட நிபுணர்கள் குழுவை அங்கு அனுப்புகிறது அமெரிக்கா.

இக்குழுவில் விஞ்ஞானிகள் தொழில்நுட்ப வல்லுநர்கள், உளவுப்பிரிவு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகளும் இடம்பெறுவர் என்று பாதுகாப்புத் துறை அதிகார பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

இக்குழுவுக்கு ஈராக் ஆய்வுக்குழு எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சிவிலியன்கள் அதிகம் இடம் பெற்றுள்ள இக்குழுவின் தலைவராக இராணுவ ஜெனரல் ஒருவர் செயல்படுவார். இக்குழுவுக்குத் தேவையான உபகரணங்களுடன் நடமாடும் ஆய்வு மைய வசதியும் அளிக்கப்பட்டுள்ளது. பேரழிவு ஆயுதங்களைக் கண்டறிவது தொடர்பான மாதிரி ஆய்வுகளை அமெரிக்காவும், பிரிட்டனும் செய்து வருகின்றன. இக்குழுவில் பெரும் பாலும் ஆண்களே இடம்பெற்றுள்ளனர்.

ஈராக் ஆய்வுக்குழு மற்றும் அதன் நடமாடும் ஆய்வுக் கூடத்தை ஈராக்கின் பல பகுதிகளுக்கு செல்வதற்கான பணிகளை ஈராக்கில் தற்போதுள்ள 75 வது இராணுவப் பிரிவு செய்யும் என அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பேரழிவு ஆயுதங்களைத் தயாரிக்க ஈராக் திட்டமிட்டிருந்ததா என்பதைக் கண்டுபிடிக்க மண்டும் ஈராக் வருமாறு ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு ஐ.நா ஆயுதக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட ஆயுதக் கண்காணிப்பாளர்கள் ஈராக் சென்று பேரழிவு ஆயுதங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிய வேண்டும் என ஸ்டொ ஸ்பைகள் சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார் பிளிக்ஸ். (பி)

## நேபாளத்தில் புயல்

### மரம் விழுந்து 5 பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத் தலைநகர் காத்மண்டு லலித்பூர் ஆகிய ஊர்களில் ஏற்பட்ட புயலில் மரம் விழுந்து 3 பெண்கள் உட்பட 5 பேர் இறந்தனர்.

அந்த மூன்று பெண்களும் காத்மண்டில் டாக்சியில் சென்றுகொண்டிருந்த போது சாலையோரம் இருந்த ஒரு மரம் திடீரென்று சரிந்துஅந்த டாக்சி மீது விழுந்ததால் ஓட்டுநரும் மூன்று பெண்களும் இறந்தனர்.

அதைப்போல் லலித்பூரிலும் ஒரு மரம் சரிந்து விழுந்ததில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர் அங்கேயே இறந்தார்.(பி)

## தமிழகத்தில் அரசியல் பழிவாங்கல் தொடர்கிறது

# பொடா சட்டத்தை உடனே வாபஸ் பெற வேண்டும்!

### கலைஞர் கருணாநிதி

(புதுடில்லி)

பொடா சட்டத்தை உடனடியாக ரத்துச் செய்யுமாறு இந்தியப் பிரதம



ருக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதம் எழுதியுள்ளார்.

நக்கீரன் கோபால் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டதன் பின்னணியிலேயே கருணாநிதி இவ்வாறு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தில் பொடா சட்டம் தவறாகவே பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அரசியல் இலாபத்திற்கும், பழிவாங்குவதற்குமே தமிழகத்தில் பொடா சட்டம் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், கருணாநிதி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதுவரையில் தமிழகத்தில் 42 பேர் பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், இவர்களில் 22 பேர் அரசியல் கைதிகள் என்றும் அவர் மேலும் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

பொடா சட்டத்தின் கீழ் பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்பட்டிருப்பதைக் கடுமையாக விமர்சித்த கருணாநிதி பொடா சட்டம் தாமதம் இன்றி உடன் மீளப் பெறப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

#### ஸ்டாலின் மீது கொலைக்குற்றம்

இதனிடையே பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மொஹஸ் ஸ்ராலின் மீது கொலைக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

அவரைக் கைது செய்த பொலிஸாருக்கு கொலை மிரட்டல் விடுக்கப் பட்டதாக அவர் மீது புதிய வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது.

கடலூர் சிறையில் இருக்கும் ஸ்ராலினை அவரது தாயார் தயாளுக் அம்மாள் மற்றும் தி.மு.கவின் முக்கிய உறுப்பினர்கள் சந்தித்து உரையாற்றியுள்ளனர்.

இதன் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் துரைமுருகன், ஜெயலலிதாவின் ஆட்சியில் தமிழகமே சிறைக்கூடமாக மாறிவிட்டது என்று தெரிவித்தார்.

மேலும் ஜெயலலிதா தலைமையிலான அரசைக் கலைக்க வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் இராமதாஸ் முன்வைத்த கோரிக்கை தொடர்பாக எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இது விவாதிக்கப்படும் என்று கூறியுள்ளார். (பி-2)

## சார்ஸ் நோயாளிகளுக்கு பிறந்த குழந்தைகள்

(ஹொங்கொங்)

. ஹொங்கொங்கில் சார்ஸ் பாதித்த பெண்களுக்குப் பிறந்த 3 குழந்தைகளில் இருவரின் நிலைமை கடந்த வியாழக்கிழமை மோசமடைந்தது.

இதில் ஒரு குழந்தையின் தாய் கடந்த திங்கட்கிழமை இறந்து விட்டார். இறந்த பெண்ணுக்கு அறுவைச்சிகிச்சைமூலம் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் உடல்நிலை மோசமடைந்துள்ளதாக பிரசவம் பார்த்த டாக்டர் கூறினார். (பி)

## 'சார்ஸ்' நோய்க்கு விரைவில் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படும்

### உ. சு. நிறுவனம் நம்பிக்கை

(ஜெனிவா)

சார்ஸ் வைரஸ் நோய் தடிமனை ஏற்படுத்தக்கூடிய கொரோனா வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

சீனாவில் ஆரம்பித்து இந்தியா வரை பரவிவரும் சார்ஸ் நோயின் வேகம் பலரையும் பீதிக்குள்ளாக்கியிருக்கிறது.

இந்த நோயால் இதுவரை 160 இற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்ததோடு 3ஆயிரத்து 500 இற்கு மேற்பட்டவர்கள் இந்த நோயால் பீடிக்கப் பட்டுள்ளனர்.

சீனா, ஹொங்கொங் உட்பட 26 நாடுகளில் இந்த நோய் பரவியுள்ளதோடு சீனாவில் மட்டும் இந்த நோயால் 65 பேர் உயிரிழந்துள்ளனர்.

சார்ஸ் நோயை ஏற்படுத்தும் கொரோனா வைரஸ் விலங்குகள் மூலமே மனிதனுக்கு தொற்றியுள்ளதென வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய்க்கிருமி இனங் காணப்பட்டுள்ளதால் இதற்கான தடுப்பு மருந்தை விரைவில் கண்டு பிடிக்கலாம் என்று உலகசுகாதார நிறுவனம் கூறியுள்ளது. (பி-2)

## பின்லாந்து நாட்டின் முதல் பெண் பிரதமர்

(ஹெல்சிங்)

பின்லாந்தில் முதற்தடைவையாகப் பெண் பிரதமர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள அன்லி ஜற்றின் மக்சீன் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாகப் பதவியைப் பொறுப் பேற்றுள்ளார்.

பின்லாந்தின் கிராமப் புறச் சட்டத்தரணியான 48 வயதான ஜற்றின் மெக்சின் தலைமையிலான மத்திய கட்சி கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் சோசலிஸ ஜனநாயகக் கட்சியைத் தோற்கடித்துள்ளது. 1.12 பில்லியன் யூரோ வரிச்சலுகையைத் தருவதாகவும் வீழ்ச்சியுற்ற பொருளாதாரத்தகைக் கட்டியெழுப்புவதற்கான வரவு செலவுத் திட்டமொன்றை விரைவில் சமர்ப்பிப்பதாகவும் இவர் தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்திருந்தார். (பி-2)

### பாக்.தாக்குதல் பெண் மரணம்

(இஸ்லாமபாத்)

ஜம்மு-காஷ்மீரில் பாகிஸ்தான் படையினர் எறிகணை வீச்சை நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் ஒரு பெண் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் ஆரம்பித்த இந்த எறிகணைத் தாக்குதல் இரவு வரை நீடித்ததாகக் கூறப்படுகின்றது. (பி-2)

### தொண்டர் ஆசிரியர் நியமன விவகாரம்

# அடுத்த மாதம் வரை அவகாசம் தவறின் வெகுசனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மே மாதத்திற்கு முன் வடக்கு கிழக்கிலுள்ள தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவு காணப்படாவிட்டால், பெரிய அளவில் வெகுசனப் போராட்டங்களில் ஈடுபடப்போவதாக தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இதுகுறித்து பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடாத்திய த.மகாசிவம் தொடர்ந்தும் அங்கு கூறுகையில்,

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் பேரிலும், க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு இடையூறாக இருக்க விரும்பாமையாலும் வடக்கு-கிழக்கில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் என்ற கோரிக்கை தொடர்பில் எம்மால் நடாத்தப்பட்டு வந்த தொடர் அகிம்சை வழிப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டது.

தொண்டர் ஆசிரியர் நியமனத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் பெறவேண்டிய அவசியம் இல்லை. இது தமிழரின் கல்வியை திட்டமிட்டு அழித்து வரும் இனவாதிகளின் சதித்திட்டம்.

சிங்களப் பாடசாலைகளில் தேவைக்கும் அதிகமான ஆசிரியர்கள் கடமையாற்றுகின்ற நிலையில் தமிழ்ப்பகுதி பாடசாலைகளில் பெரும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.

ஆயிரம் தொண்டர் ஆசிரியர் உட்பட மூவாயிரம் ஆசிரியர்கள் வடக்கு கிழக்கில் நியமிக்க ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில் இற்றை வரை 800 பேருக்கே ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவிடயத்தில் இனியும் பொறுமை காக்க முடியாது என்று குறிப்பிட்டார். (உ-4)

### அரசாங்க மதிப்பீட்டின் படி

## வடக்கு-கிழக்கைப் புனரமைக்க 200 மி. அமெரிக்க டொலர் தேவை

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு பகுதிகளை புனரமைப்பதற்கும், இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தவும் ஆரம்ப உதவியாக ஏறக்குறைய 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

புனரமைப்பு, புனர்வாழ்வு; மீள்குடியேற்ற அமைச்சும், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஆணையாளர் ஒன்றியமும் ஒன்றிணைந்து இது தொடர்பான ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளன.

அத்துடன், இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்கும், வீடுகளை நிர்மாணிப்பதற்கும் வழங்கப்பட்டு வரும் நிதியின் தொகையையும் அரசு மேலும் அதிகரித் துள்ளது.

அதன்படி மீள்குடியமர்தலிற்கு 25ஆயிரம் ரூபாவும், வீடுகளை நிர்மாணிக்க 75 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது. (உ-10)

# அரச பணியாளர்களுக்கு மொழி விருத்தி வகுப்பு

(கொழும்பு)

சகல அரசாங்கத் திணைக்களங்களிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மொழி விருத்தி வகுப்புக்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசகரும மொழிகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதன் கீழ் தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளும், சிங்கள மொழிமூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளும் போதிக்கப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தோடு இணைந்து இவ் மொழிப் பயிற்சித் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக திணைக்களப் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இயங்கும் சகல திணைக்களங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் நாளொன்றுக்கு 2 மணித்தியாலங்கள் அலுவலக நேரத்தில் இம்மொழிப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இம்மொழிப்பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றும் உத்தியோகத்தர்களுக்கு கடமை விடுமுறையும் வழங்கப்படவுள்ளது. (உ-8)

### மன நோயாளர் பிரிவுக்கு

## தையல் இயந்திரம் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

மந்திகை மருத்துவமனையின் மனநோயாளர் வைத்தியப் பிரிவுக்கு பருத்தித்துறை இலங்கை வங்கி ஊழியர்கள் தையல் இயந்திரமொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இம்மனநோய் வைத்தியப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் பெண் மன நோயாளர்களின் பொழுது போக்கைக் கருத்திற் கொண்டே தையல இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.தேவராஜா இத்தையல் இயந்திரத்தை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளையிடம் கையளித்துள்ளார். (உ-52)

# ஹக்கீமின் கோரிக்கைக்கு மு.கா.எம்.பிக்கள் ஆதரவு

### றிசாத் பதியுதீன் எம்.பி தெரிவிப்பு

(புத்தளம்)

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தொடர்பில் அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டை அறிவிக்குமாறு கோரி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவருமான ரவூப் ஹக்கீம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பூரண ஆதரவை வழங்கியுள்ளதாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் காங்கிரஸின் அமைப்பாளருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் இதுபற்றிக கருத்துக் கூறுகையில, இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி, நாட்டின் இறைமையைப்பாதுகாப்பதுடன்,இனங்களுக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்ப ஸ்ரீலங்கா முஸ்ஸிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஆட்சியில் அமர்த்த பெரும் தியாகங்களைச் செய்திருக்கிறது. சில ஐக்கிய தேசிய கட்சி அங்கத்தவர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை விமர்சிப்பதுடன் அதன் மீது சேறு பூசும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருவதைத் தொடர்ந்தும் எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

கட்சியின் பாதுகாப்பும், இருப்புமே முஸ்லிம் சமூகத்தின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யும் அதனை நசுக்குவதற்கு ஆளும் ஐக்கிய தேசிய முன்னணிக்குள் சிலர் செயற்படுவது மனக் கிலேசத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் சுயமரியாதையை மாசுபடுத்த எவர் நடவடிக்கை எடுத்தாலும் அதற்கு ஒரு போதும் எமது தலைமைத்துவமும், பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாமும் அனுமதிக்கப் போவதில்லை.

மூதூரில்-இடம் பெற்றது போன்ற சம்பவங்கள் இனி மேலும் இடம் பெறாமல் இருப்பதற்கான உறுதிப்பாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்க வேண்டுமென்ற கோரிக்கையினை தலைமைத்துவம் விடுத்திருப்பது காலத்தின் தேவையாகும் என்றும் அவர் கூறினார். (உ)

### உள்ளூராட்சித் தேர்தலில்

## பெண்களின் பிரதிநித்துவத்தை அதிகரிக்கக் கோரிக்கை

(திருகோணமலை)

வட கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கணிசமான பெண் பிரதிநிதிகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என வடக்கு-கிழக்கு பெண்கள் இணையம் அரசியல் அமைப்புகளையும் மக்களையும் கோரியுள்ளது.

மேற்படி இணையம் சரிசமனான பெண்களின் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி பிரசாரங்களை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளது.

கிராமங்களில் உள்ள திறமையும் தேசப்பற்றுமுள்ள பெண்கள் அங்கம் வகிப்பதன் மூலம் சிறந்த அபிவிருத்திச் சிந்தனை ஏற்படுவதுடன், பெண்கள் தலைமைத்துவமும் மேம்பாடடையும் என்பதைக் கருத்தில் கொண்டு சகல அரசியல் கட்சிகளும் பெண்கள் பிரதிநிதித்துவத்தைக் கூட்ட முன்வர வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## சிறந்த வீரர்களைக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் சிறந்த வீரர்களைக் கௌரவித்துப் பரிசளிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு யா/வேம்படி உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

என்.சாந்தகுணாகரன்(யாழ். பல்கலைக்கழகம்),எஸ்பிரசன்னா(யா/மத்திய கல்லூரி),சி.குகாஜினி(யா/ பல்கலைக் கழகம்), இ.வினோஜா( கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரே இந்நிகழ்வில் கௌரவிப்புப் பெறவுள்ளனர். (உ)

## மாணவி மரணம்

(வல்வெட்டித்துறை)

தீக்காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த கு.தீபிகா (வயது 17) என்ற மாணவி சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை வைத்தியசாலையில் மரணமானார்.

மேற்படி மாணவி தீக்காயங்களுக்குள்ளான நிலையில் கடந்த மாதம் 21ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-63)

## ஆற்றில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற இரு இளைஞர்கள் ஆற்றில் மூழ்கி மரணமாகியுள்ளனர்.

ஆற்றில் குளிக்கச் சென்ற நீர்கொழும்பைச் சேர்ந்த மனோஜ்சில்வா, ஹசீம் ஆகிய இருவருமே நேற்று முன்தினம் இவ்வாறு மரணமடைந்துள்ளனர். (உ-8)

## நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் உதயதாரகை கலைமன்றம் ஈஸ்ரர் திருநாளையொட்டி நடாத்தும் பெ.கிறிஸ்தோப்பர் நினைவு விழாவும் கலைஞர்கள் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு செ.மெற்றாஸ்மயில் தலைமையில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## ஊரடங்கு தளர்த்தப்பட்டது

(கொழும்பு)

மூதூர்ப் பகுதியில் நேற்று முன்தினம் அமுலுக்கு வந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை தளர்த்தப்பட்டதாக திருகோணமலைப் பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே தெரிவித்துள்ளார்.

மூதூர்ப் பாலத்தோப்புப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ்-முஸ்லிம் குழு மோதல் சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், 6 பேர் படுகாயமடைந்தனர். இச்சம்பவத்தை அடுத்தே அங்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட போதும் அங்கு பொலிஸார் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (உ-8)

## வதிவிடப்பயிற்சி

(தென்மராட்சி)

அறவழிப் போராட்டக் குழுவின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அண்மையில் 'அறவழி தொடர்பாடல்' பற்றிய இருநாள் வதிவிடப் பயிற்சி அறநெறித் தலைமையகத்தில் நடத்தப்பட்டது.

அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருந்த அறவழிப் பயிற்சியாளர்களான ஜோன்அபே, ஜயந்தி சிவா ஆகிய இருவரும் இப்பயிற்சிகளை வழங்கினர். (உ-77)

## கணித பாட செயலமர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தினால் இன்று ஒழுங்கு செய்யப்பட்ட கணிதபாட ஆசிரியர் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது.

இச் செயலமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் எனவும், கடந்த வருடம் தரம் 9இல் கணித பாடம் கற்பித்த ஆசிரியர்களும் இவ்வருடம் தரம் 11இல் கணித பாட விசேட செயற்றிட்டத்தின் கீழ் கடமையாற்றும் ஆசிரியர்களும் இச் செயலமர்வில் பங்குபற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### அன்னை பூபதி நினைவாக

## வடமராட்சியில் இன்று அடையாள உண்ணாவிரதம்

(திருநெல்வேலி)

அன்னை பூபதியின் 15வது ஆண்டு நினைவு தினம் வடமராட்சியில் இன்று எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி வடமராட்சி சிவன் கோவில் முன்றலில் காலை9.30 மணி முதல் பி.ப. 2.30 மணிவரை அடையாள உண்ணாவிரதம் இடம்பெறவுள்ளது. வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த ச.குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், ஒளிச்சுடரை விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாவும், தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் பிரமுகரான லோரன்ஸும் ஏற்றி வைக்கவுள்ளனர்.

தொடர்ந்து ஈகைச் சுடரேற்றல், மலரஞ்சலி, நினைவுரை என்பன இடம்பெறவுள்ளன.

மாலை நிகழ்வுகள் வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த செபஸ்ரியன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இதில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் பலரும் சிறப்புரையாற்றவுள்ளனர். (உ-43)

## புத்தாண்டுப் பொது அறிவு போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு சனசமூக நிலையத்தால் புத்தாண்டை ஒட்டி நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முடிவுகள் விபரம் வருமாறு,

### கீழ்ப்பிரிவு

**1ஆம் இடம்:** ந.சரண்யா- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்

**2ஆம் இடம்:** பே.மகிழ்ரதி- கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

**3ஆம் இடம்:** ப.டுசாந்தன்- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்

*ஆறுதல் பரிசு பெறுவோர்*

ச.தனுசியா, சி.சுபியா, சி.பிருந்தினி, த.கயூபரன், ஞா.மயூரி, செ.குகன்யா, பா.சிவனருட்செல்வசர்மா, யெ.கோகுலராஜ்

### மத்தியபிரிவு

**1ஆம் இடம்:** ச.தனுசன்- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**2ஆம் இடம்:** ச.யோகாம்பிகை- யா வேம்படி மகளிர் கல்லூரி

**3ஆம் இடம்:** ம.லாவண்யா- யா/ வேம்படி மகளிர் கல்லூரி

*ஆறுதல் பரிசு பெறுவோர்*

தெ.நிருயன், ம.கிருபாஹரி, க.சரவணன், இ.அனுசா, ச.ஜெனார்த்தனன், க.அனுசன்.

### மேற்பிரிவு

**1ஆம் இடம்:** சோ.திபேந்தினி- யா/வேம்படி மகளிர் கல்லூரி

**2ஆம் இடம்:** இ.கயேந்திரா- யா/ இந்துக் கல்லூரி

**3ஆம் இடம்:** கு.பானுஜா- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

*ஆறுதல்பரிசு பெறுவோர்*

சோ.ஜெயதேவி, ச.சாரணியா, இ.நிரஞ்சன், பா.நிரோசா, தே.கேதுஜா

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. (உ)

# சுபானு வருடம்

# புத்தாண்டுப்பலன்

**சனி,குரு,ராகு,கேது மாற்றங்கள்**

**வாக்கிய பஞ்சாங்கப்படி 22.5.2003 இல் சனி இடப ராசியில் இருந்து மிதுனத்திற்கு இடம்பெயர்ந்து மிதுனராசியில் இரண்டரை வருடங்கள் வரை சஞ்சரிக்கும். 23.07 2003 இல் வியாழன் கற்கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு இடம்பெயர்ந்து ஒரு வருடத்துக்கு சிங்க ராசியில் சஞ்சாரம் செய்யும். 14.08.2003 இல் ராகு, கேதுக்கள் இடப விருச்சிக ராசிகளில் இருந்து முறையே மேட ,துலாராசிகளுக்கு மாற்றம் அடைந்து ஒன்றரை வருடம் வரை சஞ்சரிக்கும். இலங்கையில் இக்கிரகங்களின் மாற்றங்களால் பொருளாதார, இராணுவ, அரசியல், சமூகமாற்றங்கள் நடை பெறும்.**

**இம்மாற்றங்கள் பன்னிரு ராசிக்காரர்களுக்கும் ஏற்படுத்தும் பலாபலன்களைப்பார்ப்போம்.**

## சிம்மம்



(மகம்,பூரம்,உத்தரம்1-ஆம்பாதம் முடிய)

புத்தாண்டின் ஆரம்பமே சிறப்பாக அமையும். எண்ணங்கள் இனிது நிறைவேறும்,பணத்தில் உற்சாகம் கூடும்,வியாபாரம் சிறக்கும். வேற்று மொழி,மத,இனக்காரர்களது ஆதரவைப் பெற சந்தர்ப்பம் கூடி வரும். கலைஞர்கள், மாதர்கள்ஆகியோர் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். செய்தொழிலில் சீரான முன்னேற்றத்தைக் காணலாம். வெளியூர் ,வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்படும். சமுதாய நலப் பணியாளர்கள் பாராட்டுக்களை பெறுவார்கள். எதிரிகள் விலகிப் போவார்கள்.வழக்கு,வியாக்கியங்களில் வெற்றி கிட்டும்.நண்பர்கள் உற்றார்,உறவினர்களால் நன்மையும்,அல்லாததும் கலந்தவாறு ஏற்படும்.அலைச்சலை தவிர்க்க இயலாது. குரு 12-இல் உலவினாலும் வக்கிர நிலையில்சஞ்சரிப்பதால் நலன் புரிவார்.பண நடமாட்டம் திருப்திகரமாக இருந்து வரும். அலுவலகப்பணியாளர்கள், தொழிலாளர்கள் ,விவசாயிகள், ஆன்மீகவாதிகள் ,அரசியல்வாதிகள் ஆகியோருக்கெல்லாம்அனுகூலமான போக்குதென்படும்.உடல் நலம் சீராக இராது. கவனம் தேவை. சுகபங்கம் உண்டாகும்.தாய்நலம் கவனிக்கப் படவேண்டிவரும்.

மாணவர்கள் படிப்பில் முழு அக்கறை செலுத்துவது நல்லது. நிலம், மனை,வீடு, வாகனங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் சூழ பெப்ரவரி மாதத்தில்ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். சுக்கிர நிவர்த்தி பெற்று . நேர்கதியில் 12இல் உலவுவதால் பொருளாதார நிலை சீராக இராது.சுபகாரியச் செலவுகள் கூடும். மக்களால் அதிகம் அனுகூலமிராது. மக்கள் நல முன்னேற்றத்திற்காக செலவு செய்யவேண்டி வரும். சனிநேர்கதியில் 11இல் உலவத்தொடங்குவதால் உழைப்புக்குரிய பயன்கிடைத்துவரும். தொழிலாளர்களுக்கும்விவசாயிகளுக்கும் செழிப்புகூடும்.பொதுநலப்பணியாளர்கள் நலம் பெறுவார்கள்.ஏப்ரல் 11 முதல் செவ்வாய் 6ஆம் இடம்மாறி பலம் கூடப்பெறுவதால் எதிரிகள் ஓடி ஒழிவார்கள்.திட,வீர,பாராக்கிரகம் வெளிப்படும். துணிச்சலான காரியங்களில் ஈடுபடவும்,அவற்றில் வெற்றி காணவும் வழி பிறக்கும். நிலபுலங்களில் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைக்கும்.ஜுன் மாதம் 3ஆம் திகதி முதல் செவ்வாய் 7ஆம் இடம் மாறுவதால் மற்றையோரிடம் பழகும்போது பேச்சுக் கடுமையை குறைத்து இனிமையைக் காட்டிக் கொள்வது நல்லது. அதன் மூலம் நலம் பெறலாம்.

ஜுலை மாதத்தில் உங்கள் ராசிக்கு 11ஆமிடத்தில் கிரகங்கள் ஒன்று கூடுவதால் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். எதிர்ப்புகளை சமாளிக்கிற சக்தி பிறக்கும். வெளியூர்,வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்படும்.29ஆம்திகதி முதல் குரு உங்கள் ஜன்ம ராசிக்கு இடம் மாறுவது கோசாரப்படி அனுகூலமானதாகாது. என்றாலும் அவா உங்கள் ராசிநாதனுக்கு நண்பராகவும்,5-ஆம் வீட்டுக்கு அதிபதியாகவும் உள்ள காரணத்தால் அதிகம் சங்கடங்களை உண்டு பண்ண மாட்டார்.ஜன்ம குருவால் அலைச்சல், உழைப்பு ஆகியவை கூடுமென்றாலும் அதற்காக பயன் கிடைக்காமல் போகாது.7-இல் உள்ள செவ்வாயை குரு பார்ப்பதால் கணவன்-மனைவி உறவு நிலை சீர்பெறும். மக்கள் நலம்மகிழ்ச்சி தரும. தெய்வப்பணிகளிலும்,தருமப் பணிகளிலும் ஈடுபாடு உண்டாகும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோர்களால் மக்களுக்கும் அனுகூலம் உண்டாகும். ஜுலை 29முதல் செவ்வாய் வக்கிர நிலை பெறுவதால் அதிகம் சங்கடம் இராது. ஆகஸ்ட் பின் பகுதியிலிருந்து செப்டம்பர் முன்பகுதி வரையிலும் உள்ள காலகட்டம் குறிப்பிடத்தக்கது.

செப்டம்பர் 8ஆம்திகதி முதல் ராகு 9-ஆம் இடத்துக்கு மாறுவது சிறப்பாகாது, என்றாலும்குருவால் அவர்பார்க்கப்படுவதால் நலம் புரிவார்.கேது 3-ஆமிடம் மாறுவது விசேடமாகும்.இதனால் பக்தி மார்க்கத்திலும்,ஞானமார்க்கத்திலும்ஈடுபாடு கூடும். தொலைதூர தொடர்பு ஆக்கம் தரும். மனதில் உறுதி உண்டாகும். எதிர்ப்புகள் அகலும். புதய பொறுப்புகள்,பதவிகள் ஆகியவை கிட்டும்.புதிய பொருட்கள் சேரும். அக்டோபர் 26 முதல் சனி வக்கிரம் பெறுவதால் மற்றவரால் விளையக் கூடிய சுப பலன்கள் சற்று குறையும். டிசம்பர் 5 முதல் செவ்வாய் 8-ஆமிடம மாறுவது சிறப்பாகாது. எதிலும் பதற்றப்படாமல் நிதானமாக ஈடுபடுவதே நல்லது.வீண் வம்பு வழக்குகளில் பிரவேசிக்கலாகாது. பேச்சிலும்செயலிலும் நிதானம் தேவை. உடன் பிறந்தவர்களின் முன்னேற்றம் பாதிக்கப்படும். உங்களுக்கும் உடன்பிறந்தோருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். விட்டுக் கொடுத்து பழகினால் பிரிவினைக்கு ஆளாகாமல் தப்பலாம். டிசம்பர் மாதம் பின் பகுதி சிறப்பாக அமையும். முக்கியமான ஓரிரு எண்ணங்களும் நிறைவேறும்.அதிர்ஷ்ட வாய்ப்புக்கள கூடி வரும். புதிய பெறுப்புகள், பதவிகள, ஆகியவை சிலருக்கு கிடைக்கும்.

### துணிச்சலான செயல்கள்

ஏப்ரல் மாதம் முதல் குரு வக்கிர நிவிர்த்தி பெற்று,12-இல் நேர்கதியில் உலவத் தொடங்குகிறா. இது விஷேடமாகாது. 7ஆம் திகதி முதல் சனி11 -ஆமிடம் மாறுவதுகுறிபபிடத்தக்கது. இதனால் உங்கள் உழைப்புக்குரிய பயன் கிடைத்து வரும். இரக்க சுபாவம் கூடும்மற்றையோருக்கு உதவ முன் வருவீகள். தொழிலாளர்களது நிலை உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கூடும்.11ஆம்திகதி முதல்செவ்வாய் 6 ஆமிடம் மாறி வலுப்பெறுவதால்மனதில் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். துணிச்சலான செயல்களில் ஈடுபாடு அதிகரிக்கும் நிலபுலங்களின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெறுவீர்கள். உலோகங்கள், இயந்திரங்கள் ஆகியவை இலாபம் தரும். இரும்பு,எ்கு எண்ணெய் வகையறாக்களால் அதிகம் ஆதாயம் பெறலாம். ஏப்ரல் மாதப் பின்பகுதியில் புனிதப் பணிகளில் ஈடுபாடு கூடும். தொலைதூரப் பயணம் ஆக்கம் தரும் கலைஞர்கள்,மாதர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான சூழ் நிலை உருவாகும்.புதிய பொருட்களில் சேர்க்கை நிகழும்.

### வழக்கு ,வியாக்கியங்களில் வெற்றி

மே மாதத்தில் செவ்வாய்6லும்,சனி 11-லும் உலவும் நிலை அமைவதால் வெற்றி வாய்ப்புகள்கூடும். மற்றையோர் வியக்கத்தக்க வகையில் ஓரிரு சாதனைகள் ஆற்றுவீர்கள்.போட்டி பந்தயங்களிலும், விளையாட்டு விநோதங்களிலும்வழக்கு,வியாக்கியங்களிலும்வெற்றி காணச் சந்தர்ப்பம் கூடி வரும். கலைஞர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை நிலவி வரும்.அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். நிலபுலங்களில் சேர்க்கையையோ அல்லது அவற்றால் ஆதாயத்தையோ பெறுவீகள். செய் தொழிலில் அபிவிருத்தி காணலாம்.பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்றதுறைகளைச் சேர்ந்தவர்கள் செவ்வாய் பலத்தால் சிறப்புகளைப் பெறுவார்கள். கட்டிடத் தொழிலாளர்கள், சுரங்கப்பணியாளர்கள்,தோட்டப்பணியாளர்கள்ஆகியோருக்கெல்லாம் செழிப்பு கூடும். சுப காரியச் செலவுகளை மேற்கொள்ள வேண்டி வரும். மக்கள் நல முன்னேற்றத்திற்காகச் செலவு செய்ய நேரலாம்.

### சுபகாரியங்களில் ஈடுபாடு

ராசிநாதன் சூரியன் பலம் பெற்று உலவுவதாலும், செவ்வாய், சுக்கிரன், சனி, ராகு ஆகியோரது சஞ்சாரம் அனுகூலமாக இருப்பதாலும் ஜுன் மாதத்தில் உங்கள் பராக்கிரமம் மேலும் கூடும். முக்கியமான சுபகாரியங்கள் இனிது நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். கலைஞர்கள், மாதர்கள் ஆகியோருக்கெல்லாம் வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். புதிய கண்டு பிடிப்புகளின் மூலம் பெயரும் புகழும்கூடும். தொழிலாளர்கள், விவசாயிகள்,பொது நலப் பணியாளர்கள்,அரசியல்வாதிகள், இயந்திரப்பணியாளர்கள்,அரசப்பணியாளர்கள், நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள ஆகியோருக்கெல்லாம் செழிப்பு கூடும். 4இல் கேதுவும்7இல் செவ்வாயும் உலவுவதால் நிலபுலங்கள் விஷயத்தில் விழிப்புதேவை. 8ஆம் திகதி முதல் புதன் 10ஆமிடம் மாறுவதால்வியாபாரிகளுக்கு இலாபம் கூடும்.மாதப்பின் பகுதியில் 11ஆமிடத்தில் கிரகங்களின் சேர்க்கை நிகழ்வதால் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம் பெறச் சந்தர்ப்பம் கூடி வரும்.வெளிநாட்டுத்தொடர்பு பயன்படும்.

### வெளிநாட்டுத்தொடர்பால் அனுகூலம்

உங்கள் ராசிக்கு 10,11ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் நலம் புரியும் விதத்தில் உலவுவதால் யூலை மாதத்தில் பல விதங்களிலும்ஆதாயம் வந்து சேரும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்பால் அனுகூலம் உண்டாகும். கலைத்துறைகளைச் சேர்ந்த்வர்கள் வெற்றிப் படிகளில் ஏறுவார்கள்.புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். பயணத்தால் அனுகூலம் உண்டு. மாதப்பின் பகுதியில் ராசிநாதன் 12ஆம் இடம் மாறுவதால் அலைச்சல், மனஉளைச்சல், ஆரோக்கியக் குறைவு ஆகியவை ஏற்படும். எதிர்பாராத செலவுகள் உண்டாகும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. அரசு விவகாரங்களில் விழிப்பு தேவை.தந்தையால் சிறு சிறு சங்கடங்கள் உண்டாகும். மறதியால் அவதிப்பட நேரலாம். மாணவர்கள் படிப்பில் முழுக் கவனம் செலுத்துவது அவசியமாகும். விளையாட்டு, வினோதங்களில் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது நல்லது. வியாபாரிகள் அகலக் கால் வைக்கலாகாது. எக்காரியத்திலும் நிதானம் அவசியம் தேவை. இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை சிலருக்கு மாதப்பின்பகுதியில் ஏற்படும்.

### வேற்றுமத,மொழிக்காரர்கள் நன்மை

ஆகஸ்ட் மாதத்தில் சனியும், ராகுவும் அனுகூலமாக உலவுவதால் தொழிலாளர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கூடி வரும் இரும்பு,எ்கு, எணணெய் வகையறாக்கள், தோல்ப் பொருட்கள்,ஏற்றுமதி-இறக்குமதி இனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றின் மூலம் ஆதாயம் பெறலாம். வேற்று மொழி, மதக்காரர்கள் நலம் கூடும்.ஜன்மராசியில் குரு உலவினாலும்கூட அவர் உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டோன்ஆவதாலும்,ராசிநாதன் சூரியனுக்கு நட்புக்கிரகம் என்பதாலும்அதிக சங்கடங்களை உண்டு பண்ணமாட்டார். அறிவாற்றல் கூடும் மக்கள் நலம்,வாழ்க்கைத் துணை நலம,பெற்றோர் நலம் யாவும் கவனிப பின பேரில் சீராகவே இருந்து வரும். நல்ல எண்ணங்கள் மனதில் உருவாகும்.உடல் நலம் சீர்பெறும். மாதப்பின் பகுதியில் முக்கிய பதவிகள், பொறுப்புகள் ஆகியவை கிட்டும் வியாபாரிகளுக்கு இலாபம் கூடும்.கணிதம், எழுத்து,விஞ்ஞானம்போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபீட்சம் காண்பார்கள். கலைஞர்களுக்கும், மாதர்களுக்கும் சிறு சிறு பிரச்சினைகள சூழும். 7ல் உள்ள செவ்வாயைக் குரு பார்ப்பதால் நலம்புரிவார்.

### அந்தஸ்த்தும் ,புகழும் கூடும் நேரம்

செப்டம்பர் மாதத்தில் உங்கள் ஜனம ராசியில் சூரியன்,குரு,சுக்கிரன் ஆகியோர் ஒன்று கூடி உலவுவதாலும்,செவ்வாயைக் குரு பார்ப்பதாலும், சனி பலம் கூடி இருப்பதாலும் உங்கள் அந்தஸ்த்தும் ,மதிப்பும் உயரும். மற்றையோரால் புகழப்படுவீர்கள். முக்கியமான காரியங்கள் நிறைவேறும். நிர்வாகத்திறமை பளிச்சிடும்.காடு,மலை, வனாந்தரங்களில் தொழில் புரிபவர்கள் ஏற்றம் பெறுவார்கள். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும்.அரசுப்பணியாளர்கள் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். வாழ்க்கைப்பாதையில் முன்னேற்றம் காண நல்ல வாய்ப்புகள் கூடி வரும்.பொது நலப்பணிகளில் ஆர்வம் கூடும்.முக்கியஸ்தர்கள் உங்களுக்கு உதவுவார்கள். மக்களாலும்,பெற்றோராலும் அனுகூலம் உண்டாகும்.நல்ல வேலையாட்கள் அமைவார்கள். குடும்ப நலம் சீராக இருந்து வரும். செப்டம்பர் 8ஆம் திகதி முதல் ராகு 9ஆம் இடம் மாறினாலும் குரு பார்ப்பதால் நலம்புரிவார்கள். கேது 3ஆம் இடம் மாறுவது விசேஷமானதாகும். இதனால் ஞானமார்க்கத்திலும் பக்தி மார்க்கத்திலும் தெளிவு பிறக்கும். எதிர்ப்புகள் அகலும்.மாதப்பின் பகுதியில் சிறு சிறு உபத்திரவங்கள் ஏற்படும்.20ஆம் திகதி முதல் புதன் உங்கள் ஜன்மராசியில் நேர்கதியில் உலவுகிற நிலை அமைவதால் வியாபாரிகள் கணிதம், எழுத்து, பத்திரிகை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் முன்னேற்றத்திற்கான அறிகுறி தெரியவரும்.

### குடும்பத்தில் குதூகலம்

அக்டோபர் மாதத்தில் புதன் 2ஆம் இடம் மாறி,வலுப்பெறுவதால் உங்கள் வாக்கு வண்மை வெளிப்படும் வியாபாரத்தில் விசேஷமான வளர்ச்சியைக்காணலாம். கணிதம், எழுத்து,பத்திரிகை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான சூழ்நிலையைக் காண்பார்கள்.

**ஜோதிட பூஷணம் வித்வான் வே. லட்சுமணன்**

குடும்பத்தில் குதூகலம் கூடும். பிரசசினைகள் குறையும். தரகர்கள், மத்தியஸ்தர்கள், பேச்சின்மூலம் ஜீவனம் செய்பவர்கள் ஆகியோருக்கெல்லாம் நல்ல வாய்ப்புகள் கூடி வரும்.4ஆம் திகதி முதல் சுக்கிரன் 3ஆம் இடம் மாறி,ஆட்சி நிலை பெறுவதால் கலைத்துறைகளைச் சேர்நதவர்கள் வளர்ச்சி காண்பார்கள். நல்ல தகவல் வந்து சேரும்.உடன் பிறந்தவர்களால் ஓரிரு எண்ணங்கள் நிறைவேறும். 26ஆம் திகதி முதல் சனி வக்கிரம் பெறுவதால் அவரால் விளையக்கூடிய சுபபலன்கள் சற்று குறையும். 28ஆம் திகதி முதல் கேளிககை,உல்லாசங்களில் ஈடுபாடு கூடும் புதிய ஆடை,அணி மணிகளில சேர்க்கை நிகழும். மாதர்கள், கலைஞர்கள் ஆகியோர் வெற்றி நடைபோடுவார்கள். நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்து வரும். தொலைதூரத் தொடர்பு ஓரளவு பயன்படும்.

### பொருட்சேர்க்கை

நவம்பர் மாதத்தில் சுக்கிரன்,கேது, சனி ஆகியோரது பலம் காரணமாக வெற்றி வாய்ப்புகள் கூடும். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும் எலக்ட்ரானிக், கம்பியூட்டர் மற்றும் தகவல் தொடர்புத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். புதிய ஆடை,அணிமணிகள், அலங்காரப்பொருட்கள்,வாசனைத்திரவியங்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். மாதர்கள் தங்கள் எண்ணம் ஈடேறப்பெறுவார்கள். 8ஆம் திகதி முதல்மாணவர்களது நிலை உயரும். மாதப்பின் பகுதியில் நிலபுலங்களால் ஓரளவு ஆதாயம் கிடைத்து விடும். கணவன்-மனைவி உறவு நிலை திருப்தி தரும்.சமுதாய நலப் பணியாளர்கள் ஏற்றம் பெறுவார்கள். தொழிலாளர்களுக்கும், விவசாயகளுக்கும் அனுகூலமான போக்கு தென்படும்.22ஆம் திகதி முதல் மக்களால் ஓரிரு காரியங்கள் நிறைவேறும்.மனதில் உற்சாகம் கூடும். புதிய முயற்சிகள் கூடி வரும்.

### உடன்பிறந்தவர்களால் சங்கடம்

டிசம்பர் மாதத்தில் செவ்வாய் 8ஆம் இடம் மாறுவ்தாலும்,3இல் கேது உலவுவதாலும் உடன் பிறந்தவர்களுக்கும், உங்களுக்குமிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படும். விட்டுக்கொடுத்துப் பழகி வருவது நல்லது. உடன்பிறந்தவர்களது முன்னேற்றம் தடைப்படும். வீண் சண்டை,சச்சரவுகளில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. ரியல் எஸ்டேட்இனங்களில் எச்சரிக்கை தேவை. எதிலும் வேகம் கூடாது. மாதப்பின் பகுதியில் சுக்கிர பலம் குறைவதால்கணவன்-மனைவியரிடையேசலசலப்புகள் உண்டாகும். கேளிக்கை,உல்லாசங்களைக் குறைத்துக்கொள்வது நல்லது. கலைஞாகள் பொறுப்புடன் செயல்படுவது அவசியமாகும். அரசியல், நிர்வாகம், கணிதம்,எழுத்து போன்றதுறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். மக்களால் ஓரிரு நன்மைகள் உண்டாகும்.

### நலம்கூடப்பெறச் சில வழிமுறைகள்

இந்தப்புத்தாண்டின் ஆரம்பம் சிறப்பாக இருக்கும் எனச் சொல்லப்பட்டுள்ளது. கேது 4இல் இருப்பது குறையாகும். செப்டம்பர் 8ஆம்திகதிவரையிலும்கேதுவுக்குப் பிரீதி,பரிகாரங்களைச் செய்து வருவதன் மூலம் சுக பங்கம் ஏற்படாமல் இருக்கும்.கேதுவுக்காக விநாயகரை வழிபடலாம்.விநாயகர் அகவல் பாராயணம் செய்வது நல்லது.

ஏப்ரல் 4முதல் குரு வக்கிர நிவர்த்தி பெற்று,12இல் உலவுகிற நிலை அமைவதால் குருப் பிரீதி செய்வது நல்லது. குருவுக்காகத் தெட்சணாமூர்த்தியை வழிபடுவது சிறப்பாகும்.

வியாழக்கிழமைகளில் குரு அஷ்டோத்திர சத நாமாவளியைச் சொலலி வழிபடலாம் குரு ஸ்தானத்தில் உள்ளவர்களை வணங்குவதன் மூலமும் குரு பிரீதி செய்த பலன் உண்டாகும்.

டிசம்பர் மாதத்தில் செவ்வாய் 8ஆம்இடத்தில் உலவுகிற நிலை அமைவதால்செவ்வாய்க்குப் பிரீதி செய்வது நல்லது.

சிம்மராசியில் பிறந்துள்ள உங்களுக்குச் சூரியன் கண்கண்ட தெய்வமானார். ஞாயிற்றுக்கிழமைகளில் ஆதித்தனை வழிபடுவதன் மூலமும்,சிவ வழிபாடு செய்வதன் மூலமும் வாழ்க்கையில் சுபீட்சம் கூடப் பெறலாம்.

ஆதித்யஹ்ருதயம் பாராயணம் செய்வது நல்லது.

இயன்றவர்கள் வருடம் ஒரு முறை சூரியனார் கோயில் சென்று வழிபடுவதன் மூலம் நலம் கூடப் பெறலாம்.

சனிபலம் காரணமாக சமுதாயத்தில் ஓர் அந்தஸ்த்தைப் பெறுவீர்கள்.திறமைக்கும்,உழைப்புக்கும்உரிய பயன் கிடைக்காமல் போகாது.

செப்டம்பர் 8முதல் ராகுவுக்காகத் துர்க்கையை வழிபடுவது அவசியமாகும்.ராகுவைக்குருபார்ப்பதால் அதிகம் சங்கடங்களை உண்டு பண்ணமாட்டார்.மேஷராகு என்பதாலும்,9ஆம் இடத்தில் உள்ள ராகு என்பதாலும் நற்பலன்களை உண்டு பண்ணுவார் எனச் சொல்லலாம்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டின் பின் பகுதிக்காலம் முன்பகுதியை விட ஓரளவு சிறப்பானதாகும்.


(தொடரும்)

## 8இலட்சம்ரூபா நிதி ஒதுக்கீடு

(சுதுமலை)

காக்கைதீவு கிராமவீட்டுத் திட்டப்பகுதிக்கு மின்சார விநியோகம் செய்வதற்கும் சண்டிலிப்பாயிலுள்ள பழைய கராஜ் வீதி புனரமைப்பிற்கும் தேவையான 8 இலட்சத்து 20 ஆயிரம்ரூபா நிதியை ஒதுக்கீடுசெய்ய மாகாண அபிவிருத்தி அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக வலி தென்மேற்கு பிரதேச திட்டமிடல் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாண்டிற்கென ஒதுக்கப்பட்ட பிரமாண அடிபபடையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து நவாலிதெற்கு-சி.எஸ்.ஐ. வீதியும் சென் அன்ரனிஸ் சனசமூக நிலையமும் புனரமைக்கப் படவுள்ளதாகவும்சம்பந்தப்பட்டதிணைக்களம் தெரிவித்துள்ளது. (க-252)



துருக்கி நாட்டு முகாம் ஒன்றில் அணிவகுத்து நிற்கும் துருக்கி டாங்கிகள்.



ஈராக் நஜப் என்ற இடத்தில் அமெரிக்க இராணுவத்தினரின் பிடியில் சிக்கிய ஈராக்கியர்.

## தடை நீக்கக் கோரிக்கைக்கு ரஷ்யா எதிர்க்கருத்து

(மொஸ்கோ)

ஈராக்கில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதால் மட்டுமே அந்நாட்டுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை நீக்கும்படி கோர முடியாது என்று ரஷியா கடந்த வியாழக்கிழமை கருத்துத் தெரிவித்துள்ளது.

பேரழிவு தரும் ஆயுதங்கள் ஈராக்கில் இல்லை என்பதை ஐ.நா ஆயுதச் சோதனைக்குழு திட்டவட்டமாக அறிவித்த பிறகு தடை நீக்கம் தொடர்பாக ஐ.நா பாதுகாப்பு மன்றம் தான் முடிவு செய்யவேண்டும் என்று ரஷிய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக இன்டர் பேக்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சதாம் ஹுசைன் தலைமையிலான அரசு வீழ்த்தப்பட்டுள்ளதால் ஈராக்குக்கு எதிரான பொருளாதாரத் தடையை விலக்கிக் கொள்ள தீர்மானம் கொண்டு வரப்படும் என்று அமெரிக்க அதிபர் புஷ் அறிவித்திருந்தார். இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக தனதுநிலையை வெளியிட்டுள்ளது ரஷியா. (பி)

## ஈராக் மறுசீரமைப்பில் யாருக்கு முன்னுரிமை?

(வாஷிங்டன்)

சதாமின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள ஈராக்கின் அரசியல் பொருளாதார மறுசீரமைப்பில் முன்னுரிமையுடன் பங்கு பணியாற்றுவது யார் என்பதில் அமெரிக்காவுக்கும் ஈராக் மீதான போருக்கு எதிராக குரல் கொடுத்து வந்த நாடுகளுக்குமிடையில் கருத்து முரண்பாடு தலை தூக்கியுள்ளது.

சதாம் ஹுசைனை அகற்றுவதில் அமெரிக்க மற்றும் பிரித்தானியப் படைகள் பிரதான பங்கு வகித்தமையால் ஈராக்கின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் தமக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென இவ்விரு நாடுகளும் கோரி வருகின்றன.

எனினும் ஈராக்கின் அரசியல் மற்றும் பொருளாதார நிர்வாகத்தில் ஐ.நா சபையே பிரதான பங்கு வகிக்க வேண்டுமென ரஷ்யா, ஜேர்மன், மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கோரி வருகின்றன.

இது மட்டுமன்றி பாரிய அழிவுகள் ஏற்படுத்தும் ஆயுதங்கள் வைத்திருந்ததன் அடிப்படையிலேயே ஈராக் மீது பல தடைகள் விதிக்கப்பட்டன என்றும் இதுவரையில் அவ்வகையான ஆயுதங்கள் ஈராக்கில் கண்டெடுக்கப்படாத நிலையில் தடைகள் அகற்றுவதில் சிக்கல் ஏற்படும் என்று ஐ.நா சபை வட்டாரங்கள் கூறுகின்றன. (பி-2)



ஈராக் நசிரியா அருகே அந்நாட்டு இராணுவ முகாமில் காணப்பட்ட அதிபர் சதாம் ஹுசைனின் படத்தை நோக்கி துப்பாக்கியை நீட்டி வெறுப்பைக் காட்டுகிறார் அமெரிக்க வீரர்.

## ஈராக்கில் அமெரிக்க டொலர் புழக்கத்தில் இருக்கும்

(வாஷிங்டன்)

ஈராக்கில் புதிய அரசு அமைந்து சீரான நிர்வாகம் தோற்றுவிக்கப்படும் வரை அங்கு அமெரிக்க டொலர் புழக்கத்தில் இருக்கும்.

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்ட போதிலும் சதாம் ஹுசைன் மற்றும் அவரது நெருங்கிய சகாக்கள் மற்றும் அமைச்சர்கள் இன்னும் பிடிபடவில்லை.

சதாம் ஹுசைனின் இரண்டு மகன்மார் பற்றிய உறுதியான தகவலும் எதுவும் இன்னும் இல்லை. இதனால் சதாம் ஹுசைன் உட்பட 55 பேரைத் தேடப்படும் குற்றவாளிகளாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சதாம் ஹுசைன் பற்றித் துப்புக் கொடுத்தால் பெருமளவு பணப்பரிசு தரப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. ஈராக்கில் தற்போது எந்த அரசும் பொறுப்பில்லை. இதனால் அந்த நாட்டின் பணத்துக்கு மதிப்பு இல்லாமல் போயுள்ளது.

இதன் காரணமாக தற்காலிகமாக அமெரிக்க டொலர்களை ஈராக்கில் புழக்கத்தில் விட அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இந்த நடைமுறை ஈராக்கில் புதிய அரசு பதவியேற்கும் வரை இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (பி-2)

## ஈராக்கிற்கான மனிதாபிமான நிதி உதவிகள்

(குவைத்)

போரினால் சீரழிந்த ஈராக் நாட்டுக்கு பல்வேறு உலக நாடுகளும் தனியார் அமைப்புகளும் ஏராளமான நிதியுதவியை அளிக்க முன்வந்துள்ளன.

ஆனால் ஈராக் நாட்டில் நிலையான அரசு நிர்வாகமும் பொதுமக்களுக்குப் போதிய பாதுகாப்பும் இல்லாத காரணத்தால் இந்த நிதியுதவியை எவ்வாறு விநியோகிப்பது என்பதில் குழப்பம் நிலவி வருகிறது.

ஈராக் நாட்டுக்குத் தேவையான நிவாரண உதவிகளை ஐக்கிய நாடுகள் அமைப்பு திரட்டி வருகிறது. (பி)

## ஈராக்கில் அனைத்துப் பிரிவினரும் கூட்டாக செயல் படவேண்டும்

### அரபு லீக் வற்புறுத்துகிறது

(கெய்ரோ)

ஈராக்கின் அனைத்துப் பிரிவினரும் இணைந்து தனது சொந்தக் காலில் நின்று செயல்பட வேண்டும் என்று அரபு நாடுகளின் கூட்டமைப்பான அரபு லீக் யோசனை கூறியுள்ளது.

அதன் தலைமைச் செயலாளர் அமீர் மூஸா ஈராக்கில் உள்ள பல்வேறு இன, மதப்பிரிவினருடன் கடந்த செவ்வாயன்று விவாதித்தார்.

நஸிரியா நகரில் நடந்த இக்கூட்டத்தில் அரபுகள், குர்துகள், ஷியா, சன்னி, துர்கமென், அஸிரியன் ஆகிய இனத்தலைவர்களும் கிறிஸ்தவ தலைவர்களும் பங்கேற்றனர்.

ஈராக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் எல்லா ஈராக்கிய பிரஜைகளும் தனிக் கூட்டாகச் செயல்பட வேண்டும் என்று மூஸா வலியுறுத்தினார். (பி)

## சதாம் கொல்லப்பட்டிருக்கலாம் வெள்ளை மாளிகை பேச்சாளர் கருத்து

(வாகோ)

சதாம் ஹுசைன் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையின் தலைமை நிர்வாக அதிகாரி ஆண்ரூட் கார்ட் தெரிவித்துள்ளார்.

இன்டர்நெட்டில் நேரடியாகக் கேட்கப்பட்ட பலதரப்பட்ட கேள்விகளுக்குத் தயங்காமல் பதிலளித்தார் அவர்.

வெள்ளை மாளிகையின் அதிகார பூர்வ இணையதளத்தில் உரையாடும் வசதியை அறிமுகப்படுத்திய போது உலகம் முழுவதிலும் இருந்து தொடுக்கப்பட்ட கேள்விக் கணைகளுக்கு எவ்விதத் தயக்கமும் இன்றிப் பதிலளித்ததாக கடந்த வியாழக்கிழமை விடுத்துள்ள ஓர் பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

ஒன்லைனில் தொடுக்கப்பட்ட கேள்விக் கணைகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவர் பதிலளித்துள்ளார்.

ஈராக் தாக்குதலில் சிவிலியன்கள் தாக்கப்படுவது, வடகொரியாவுடனான மோதல், போர் எதிர்ப்புப் பேரணிகள் மற்றும் பலதரப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

சதாமை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிக்காத போது ஈராக் போர் வெற்றி பெற்றதாக எவ்வாறு அறிவிக்க முடியும் என ஒருவர் கேட்டார். அதற்குப் பதிலளித்த ஆண்ட்ரூ, சதாம் இறந்திருக்கலாம் என நினைக்கிறேன். சதாம் ஆட்சி வீழ்ந்து விட்ட நிலையில் ஈராக் மக்கள் யு.எஸஜ் மற்றும் அதன் தோழமை நாடுகளுக்கு இருந்த மிரட்டல் நீங்கியுள்ளது என்றார். (பி)

## பக்தாத்தின் புதிய கவனர், மேயரும் நியமனம்

(துபை)

பக்தாத் இடைக்கால கவர்னராக முகமது மோசென் அல்-ஜுபைதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பக்தாத் நகர மேயரான ஜெளதத் ஒபீதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.இவர்கள் இருவருமே ஈராக் புதிய அதிபராவார் என எதிர் பார்க்கப்படும் முகமது சலாபிக்கு நெருக்கமானவர்கள்.

பக்தாத்தில் உள்ள முக்கியப் பிரமுகர்களுடன் நடத்திய தீவிர பேச்சுவார்த்தைக்குப் பிறகே கவர்னர் பதவிக்கு ஜுபைதியின் பெயர் தெரிவு செய்யப்பட்டதாக அல்-ஜஸீரா ரி.வி ஒபீதி தெரிவித்துள்ளார்.

பக்தாத்தில் சுதந்திரமான முறையில் பொதுத் தேர்தல் நடைபெறும் வரை இடைக்கால நிர்வாகம் நீடிக்கும் எனக் கூறியுள்ள ஒபீதி, தேர்தல் திகதி மற்றும் அதற்கான அனுமதி அமெரிக்காவிடம் பெறப்பட்டுள்ளதா என்பதைத் தெரிவிக்கவில்லை.


பக்தாத்தில் குடிநீர், மின்சப்ளை தடைப்பட்டுள்ளது. அவற்றைச் சரி செய்தல் மற்றும் திருட்டுக்களைக் கட்டுப்படுத்துவது போன்ற பணிகளை இடைக்கால நிர்வாகம் மேற்கொள்ளும்.

பக்தாத் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் சதாம் எதிர்ப்பாளர்களின் ஆதரவும் முக்கியத்தலைவர்களின் ஆதரவும் தமக்கு உள்ளதாக அல்-ஜுபைதி கூறியுள்ளார்.

மக்களுக்குச் சேவை செய்யவும், சட்டம் ஒழுங்கு நிலைமையைச் சரி செய்யவுமே முன்னுரிமை அளிப்போம் என ஜுபைதி கூறினார். (பி)



கடற்படை விமான தாங்கி கப்பல் கிட்ஹாக்கில் குண்டுகள் மத்தியில் விமானப்படை ஊழியர்.



ஏவுகணை தாக்கியதில் ருமைலா என்ற இடத்தில் பற்றி எரியும் எண்ணெய் ஆலை.

## சதாமின் மற்றொரு சகோதரர் கைது

(துபை)

சதாம் ஹுசைனின் மற்றோர் சகோதரர் பர்ஸான் இப்ராகிம் ஹசன் அல்-டிக்ரிதி அமெரிக்கப் படையினரால் பக்தாத்தில் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இத்தகவலை அமெரிக்கப் பாதுகாப்புத்துறையின் பிரிகேடியர் ஜெனரல் வின்செண்ட் புரூக்ஸ் தெரிவித்தார். ஈராக் மக்கள் அளித்த ரக்சியத் தகவலின் அடிப்படையிலேயே பர்ஸான் கைது செய்யப்பட்டதாக புரூக்ஸ் கூறினார்.

இவர் சதாமின் ஆலோசகராக பணியாற்றியவர். சதாம் அரசின் நிர்வாகச் செயல்பாடுகள் இவருக்கு நன்றாகத் தெரியும்.

சதாமுக்கு 3 சகோதரர்கள் உள்ளனர். அவர்களில் கைது செய்யப்பட்ட 2 வது சகோதரர் பர்ஸான் இப்ராகிம் ஹசன் அல்-டிக்ரிதி என்ற மற்றொரு சகோதரர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

3வது சகோதரர் சாபாவி இப்ராகிம் ஹசன் அல்-டிக்ரிதி சிரியாவில் டமாஸ்கஸ் நகரில் தஞ்சம் புகுந்துள்ளதாக லண்டனைச் சேர்ந்த நாளேடு ஒன்று செய்தி பிரசுரித்துள்ளது. (பி)

### மியூஸிய சூறையாடலை எதிர்த்து

## புஷ் நிர்வாகத்திலிருந்து இரு அதிகாரிகள் ராஜினாமா

(வாஷிங்டன்)

பக்தாத்தில் 6 ஆயிரம் வருடங்கள் புராதனமான கலைப் பொக்கிசங்கள் வைக்கப்பட்டிருந்த அரும் பொருட்காட்சிச் சாலையையும் பெறுமதி மிக்க நூல்கள் அடங்கிய நூல் நிலையத்தையும் பாதுகாக்க அமெரிக்கப்படைகள் தவறியுள்ளன என்று குற்றஞ்சாட்டி புஷ் நிர்வாகத்தைச் சேர்ந்த கலாசார ஆலோசகர்கள் இருவர் பதவி விலகியுள்ளனர்.

பெறுமதி மிக்க நூல்களைக் கொண்ட நூல் நிலையமும் அரும் பொருட்காட்சிச்சாலையும் சில நாட்களுக்கு முன்னர் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. (பி-2)

## ஆயுதக் கிடங்கில் குண்டு வெடித்து ஒருவர் பலி

(கட்டார்)

ஈராக்கில் ஆயுதத் தளபாடக் கிடங்கை ஆய்வு செய்து கொண்டிருந்த போது ஏற்பட்ட வெடி விபத்தில் ஓர் ஈராக்கியர் கொல்லப்பட்டார். மேலும் 2 ஈராக்கியர், 3 அமெரிக்க வீரர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்த 3 அமெரிக்க வீரர்களும் உடனடியாக அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் ஈராக்கியர்களின் கதி என்ன என்று தெரிவிக்கப்படவில்லை.

அமெரிக்க வீரர்களை ஆயுதத் தளபாடக் கிடங்குக்கு 3 ஈராக்கியர்கள் அழைத்துச் சென்றுள்ளனர். அப்போது வெடிக்காத பீரங்கி குண்டு அருகே ஈராக்கியர் சென்ற போது அது வெடித்ததாகக் கூறப்படுகிறது. (பி)

## சதாமின் சொந்த ஊரில் கோஷ்டி மோதல்

(திக்ரித்)

சதாம் ஹுசைனின் சொந்த ஊரான திக்ரித் அருகே அவரது ஆதரவாளர்களுக்கும் போட்டிக் குழுவுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை மோதல் ஏற்பட்டது.

அமெரிக்க மரைன் வீரர்கள் தலையிட்டு இரு குழுக்களையும் விலக்கி விட்டனர்.

திக்ரித் நகரில் உள்ள ரேஷன் கடையில் உணவுப் பொருள்களை கடந்த புதன்கிழமை விநியோகம் செய்து கொண்டிருந்த போது மோதல் ஏற்பட்டது என லெப்.கர்னல் பிரெடி பிலிஷ் கூறினார். இரு பிரிவினரும் கம்புகளால் தாக்கிக் கொண்டனர்.மற்றொரு சம்பவத்தில் அரிசி, சர்க்கரை, பால் ஆகியவற்றை லாரிகளில் ஏற்றிச் சென்ற 3 பேரை 8 பேர் கொண்ட சதாமின் ஆதரவாளர்கள் தாக்கினர். மற்றொரு சம்பவத்தில் காரில் சென்று கொண்டிருந்த 2 பேரை 10 பேர் அடங்கிய குழு தாக்கியது.

வடக்கு ஈராக்கில் மோசுல் நகரில் ஏற்பட்ட வன்முறைகளில் 3 பேர் உயிரிழந்தனர். (பி)

## இன்று ஒரு தகவல்

# மருள் நீங்கிய மாசறு காட்சி!

ஒரு முனிவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. ஓர் ஊசியில் நூலைக்கோர்த்து தன் வேட்டியில் இருந்த கிழிசலைத் தைத்துக்கொண்டிருந்தார். கைதான் கடமையைச் செய்து கொண்டிருந்தது. மனது கடவுளை நினைத்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலே பார்வதியும் - பரமசிவனும் ஆகாய வீதியிலே அப்படியே வலம்வந்து கொண்டிருந்தார்கள். மரத்தடியில் ஒளிப்பிழம்பாக உட்கார்ந் திருந்தார் முனிவர். பார்வதி இதைக் கண்டதும் உடனே பரமசிவன் பக்கம் திரும்பி "அங்கே மரத்தடியில் பார்த்தீர்களா?" என்று கேட்டார். "பார்த்தேன்" என்றார் அவர்.

பிறகு என்ன? அதைப் பார்த்ததன் பின்னரும் நாம் எப்படிச் சும்மாபோவது? வாருங்கள். அங்கே போய் அவருக்கு ஏதாவது வரம் கொடுத்துவிட்டுவரலாம் என்றார் பார்வதி. பரமசிவன் முகத்தில் புன்னகை. "அவனைப் பற்றி லேசாக நினைத்து விடாதே! அவன் அந்த நிலையை எல்லாம் கடந்தவன். இப்போது நாம் அவனிடம் போவது வீண்வேலை அதனால் வேண்டாம். வா! நாம் நமது வழியில் போவோம்" என்றார்.

இருந்தாலும் பெண்கள் சொன்னால் சொன்னது தானே. பிடிவாதத்திலே விட்டுக் கொடுக்க மாட்டார்களே. அப்படி இருக்கும் பொழுது அம்மை என்கின்ற மாயாசக்தி ஆண்டவனைச் சும்மாவிட்டுவிடுமா? கட்டாயப் படுத்தி மரத்தடிக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டார். வழக்கமாக ஆண்கள் என்ன செய்வார்களோ அதையே அவரும் செய்துவிட்டார். அதாவது சொல்வதைச் சொல்லிப் பார்த்துவிட்டு வேறு வழியில்லையென்று தெரிந்ததும் சரி வா! என்று சொல்லிக்கொண்டு கூடவே வந்து விட்டார். இருவரும் வந்து அந்த முனிவர் முன்னால் நின்று வணக்கம் என்றார்கள்.

முனிவர் நிமிர்ந்து பார்த்தார். "அடடே! அம்மையும் அப்பனுமா! வாருங்கள்" என்று சொல்லி அன்பாக வரவேற்றார். தாகத்தோடு வந்திருப்பீர்கள் என்று சொல்லி மோர் கொடுத்து உபசரித்தார். அவ்வளவுதான் அதைக் கொடுத்துவிட்டு அவர் தன்பாட்டுக்குத் துணிக் கிழிசலைத் தைக்க ஆரம்பித்துவிட்டார். பரமசிவனும், பார்வதியும் கொஞ்சநேரம் பொறுமையாக உட்கார்ந்திருந்து பார்த்தார்கள். அவர் நிமிர்ந்து பார்க்கிற வழியைக் காணோம். "சரி! நாங்கள் புறப்படுகிறோம்" என்று குரல் கொடுத்தார்கள். மிகவும் சந்தோஷம் போய்விட்டு வாருங்கள்! வணக்கம் என்றார் முனிவர். அப்படிச் சொல்லிவிட்டு மறுபடியும் துணியைத் தைக்க ஆரம்பித்துவிட்டார்.

பார்வதி, பரமசிவன் பக்கம் திரும்பி கேளுங்கள் என்பது மாதிரிக் கண்ணைக் காட்டினார். அவரும் அதைப் புரிந்து கொண்டு முனிவரைப் பார்த்து "தவச் செல்வரே! நாங்கள் ஒருவருக்குக் காட்சி தந்துவிட்டால், ஏதாவது வரம்கொடுத்துவிட்டுப் போவது தான் வழக்கம். அதனால் உங்களுக்கும் ஏதாவது வரம்...!" என்று இழுத்தார் முனிவர். சிரித்தார். வரமா? உங்கள் தரிசனத்தை விடவா? அவைகள் ஒன்றும் இந்தக் கட்டைக்கு வேண்டாம். நீங்கள் உங்கள் வழியைத் தொடருங்கள்! என்றார். சொல்லி விட்டு மறுபடியும் தைக்க ஆரம்பித்து விட்டார். இருந்தாலும் பரமசிவனும், பார்வதியும் விடுவதுபோல இல்லை. "ஏதாவது வரம் கொடுக்காமல் நாங்கள் போகமாட்டோம்" என்று பிடிவாதம் பண்ண ஆரம்பித்துவிட்டார்கள்.

பார்த்தார் முனிவர். அப்படிக்கட்டாயமாக வரம் கொடுத்து விட்டுத்தான் போக வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் ஒன்று செய்யுங்கள். "இந்த ஊசிக்குப் பின்னாலே இந்தநூல் போவதற்கு வரம் கொடுங்கள்" என்றார். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏற்கனவே இந்த ஊசிக்குப் பின்னாலே இந்த நூல்தான் போய்க்கொண்டிருக்கிறதே! இதற்கு நாங்கள் "எதற்காக வரம் கொடுக்க வேண்டும்" என்றார்கள்.

"அதைத்தான் நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல் நடந்து கொண்டுவந்தால். வரவேண்டிய பலன் நியதிப் படிதானாகப் பின்னால் வருமே! இடையிலே நீங்கள் எதற்கு எனக்கு வரம் கொடுக்கவேண்டும்?" என்று கேட்டார் முனிவர். இதைக்கேட்டதும் பரமசிவனும், பார்வதியும் சிரித்துக் கொண்டே அவர்கள் வழியில் போய்விட்டார்களாம். இந்த முனிவர் எய்தியகாட்சிக்குப் பெயர்தான் "மருள் நீங்கிய மாசறுகாட்சி" என்கிறார். நினைவுக்கலை ஏந்தல் - பதின்கவனகர் - திருக்குறள் இராமையா முப்பது வயதிலே பார்வையை இழந்த இவர் முப்பால் ஒளியைத் துணையாகக் கொண்டவர். நமது காலத்திலே வாழ்ந்தவர்.

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சிய வர்க்கு" என்கின்ற குறளில் வருகிற 'மருள் நீங்கிய மாசறு காட்சி' என்றால் என்ன என்பதை விளக்குவதற்கு அவர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். மனதைத் தூய்மைப் படுத்த தவறியவர் இறைவனை நம்பியும் பயனில்லை. இறைவனை நம்பாமல் இருந்தும் பயனில்லை. ஆகவே, உண்டு என்பதும் இல்லை என்பதும் உள்ளம் தூய்மையாய் இருக்கும் பட்சத்தில் ஒரு புள்ளியில் சென்று முடிகிறதென்கிறார் அவர். ஆதலினால் ஒருவன் ஆஸ்திகனா, நாஸ்திகனா என்பது முக்கியமில்லை, அவன் மனத்தூய்மை உள்ளவனா, இல்லையா என்பது தான் முக்கியம்.

இதுதான் இன்றைய தகவல் என்று சொல்லி முடிக்கிற இந்த நேரத்தில், இதோ எதிரில் ஒரு வானொலி நேயர்வந்து நிற்கிறார். "என்ன விஷயம்?" என்றுவிசாரிக்கின்றேன். "எங்களுக்கு நீங்கள் ஒரு வரம் கொடுக்க வேண்டும்" என்கிறார். "என்ன வேண்டும்? கேளுங்கள்!" என்கிறேன். "அடிக்கடி புராணக்கதையைச் சொல்லி நீங்கள் எங்கள் பொறுமையைச் சோதிக்காமல் இருக்க வேண்டும்" என்கிறார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# ஐ.தே.மு. அரசுடனான உறவை மீள்பரிசீலனை செய்யவேண்டி வரும்

## முஸ்லிம் எம். பிக்கள் கூட்டாக எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தாலேயே மூதூர்ப் பகுதியில் அப்பாவி மக்கள் பலியாக வேண்டிவந்தது.

இதற்கான முழுப்பொறுப்பையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமே எற்கவேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எல்.ஹாஸ், அன்வர் இஸ்மைல், றிசாத் பதியூதின், எம். எஸ். தௌபிக் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுளளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மூதூர் பாலத்தோப்பு பிரதேசத்திற்கு அரசு போதிய பாதுகாப்பு வழங்கத்தவறிய காரணத்தால் அப்பாவி முஸ்லிம் மக்கள் உயிரிழக்க நேரிட்டது.

அததுடன் அவர்களின் உடைமைகளும் நாசமாகி உள்ளன.

இப்பகுதியில் ஏற்பட்ட சிறுபதற்றத்தை ஆரம்பத்தில் அரசு தணித்திருந்தால், வீண் உயிரிழப்பை தடுத்திருக்கலாம.

அரசு உரிய நடவடிக்கை எடுக்கத்தவறியதால் இச்சம்பவத்திற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே சுமக்க வேண்டும்.

இந்நிலைமை நீடிக்குமானால், ஐககிய தேசıய முன்னணி அரசாங்கத்துக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சிக்கும் இடையே உள்ள உறவு மீள்பரிசீலனை செய்ய நேரிடும் என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுளளது. (உ-8)

## வன்னியில் தலைமறைவாகியுள்ள

# சந்தேகநபர்களை கைதுசெய்ய விடுதலைப்புலிகள் ஒத்துழைப்பர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் குற்றச்செயல்களை புரிந்துவிட்டு வன்னிப்பகுதிக்குள் ஊடுருவி தலைமறைவாக வாழும்சந்தேக நபர்களை கையளிக்க தாம் நடவடிக்கை எடுப்பதாக விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாக பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் கொலை, கொள்ளை, பாலியல வன்முறை, தீவைப்பு, சமூகசீரழிவுகள் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட பலர் சட்டத்தின் பிடியில் அகப்படாமல் தப்பிக்கொள்வதற்காக யாழப்பாணக் குடாநாட்டிலிருந்து முகமாலையுடக வெளியேறி வன்னிப்பெருநிலப் பரப்பில் தலைமறைவாகி வாழ்கிறார்கள்.

இவர்களது இத்தகைய செயல்களால யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களின் செயற்பாடுகள், வழக்கு நடவடிக்கைகள பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான சட்டப்பரிகாரங்களை வழங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இக்குறைபாட்டை நீக்கி நீதிமனறச் செயற்பாடுகள் சீராகவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி பாதிக்கப்படும் மக்களுக்கு சரியான விமோசனத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்குடனே இவ்விடயத்தில் விடுதலைப்புலிகளின ஒத்துழைப்பு தேவைப்பட்டபடியாலும் இது தொடர்பாக ஊர்காவறுறை சட்டத்தரணிகள் சங்கசெயலாளர் பொன். பூலோகசிங்கம் விடுதலைப்புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பாராவை கடந்த வாரம் வன்னியில் சந்தித்து யாழப்பாணக் குடாநாட்டில் மக்கள எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி விரிவாக எடுத்து விளக்கினார்.

அவற்றையெல்லாம் அக்கறையோடு செவிமடுத்த நீதி நிர்வாகக் பொறுப்பாளர் பாரா, பொது மககள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகளை தீர்த்துவைக்க கூடிய வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் குற்றச்செயல்களை புரிந்துவிட்டு வன்னிப்பகுதிக்கு ஊடுருவி தலைமறைவாக வாழும் சந்தேக நபர்களை கைது செய்து செஞ்சிலுவைச்சங்கத்தின் ஊடாக கையளிக்கத் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும்,

குடாநாட்டு மக்களது துன்பதுயரங்களை நீக்க விடுதலைப்புலிகள் எப்போதும் பூரண ஒத்துழைப்பு நல்குவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் நீதி, நிர்வாகப் பரிவின் தலைமைச் செயலகததில் இடம்பெற்ற இச்சந்திப்பில் நீதியாளர்களான ஒப்பிலான், இசையமுதன் ஆகியோரும் பங்கு கொண்டனர். (உ)

## இராசி பலன்

19.04.2003
(சித்திரை 6, சனி)

**திருதியை மாலை 6.54வரை**
**அனுசம் பி.இ 4.03 வரை**
**இராகுகாலம் 9.02 - 10.32**
**சுபநேரம் 3.02 - 4.32**
**எமகண்டம் 10.30 - 3.00**

**மேடம்**
பிரயாண பயம், காரிய தடங்கல், எதிர்பாராத பிரச்சினை, அபகீர்த்தி

**இடபம்**
காரிய அனுகூலம் அபூர்வ சந்திப்பு, சென்றஇடத்தில் செல்வாக்கு, விருந்துபசாரம்

**மிதுனம்**
மனமகிழ்ச்சி, ஆரோக்கியம், வாக்குமேன்மை, எடுத்தகாரியம் கைகூடும்

**கடகம்**
வியாபார நன்மை, சிறு வியாதி, கருமங்கள் தாமதம், மனச்சோர்வு

**சிங்கம்**
உடல் நலக்குறைவு, மாதாசுகம், முயற்சி தாமதம், பிரயாணம்

**கன்னி**
கூட்டு முயற்சி, சகோதரர் உதவி, அன்னியர் சந்திப்பு, தனவரவு

**துலாம்**
காரிய தாமதம், மாதர் நட்பு, குடும்பக்கவலை, தனவிரயம்

**விருச்சிகம்**
சயனசுகம், பெரியோர் ஆதரவு, இனசனத்தொடர்பு, நல்ல முயற்சி

**தனுசு**
பிரயாண அலைச்சல், அதிக செலவு, துரோகம், கடுமையான வார்த்தை

**மகரம்**
இஷ்ட சித்தி, பெருமையடைதல், குடும்ப சுகம், தொழில் இலாபம்

**கும்பம்**
பிறர் உதவி, செய்தொழில் நன்மை, மேன்மை, முயற்சி கைகூடும்

**மீனம்**
புதிய திருப்பம், சொத்துக்களால் நன்மை, முயற்சி தாமதம், பிரயாணம்

**(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**வளவன்.**

## போரினால் பாதிக்கப்பட்ட

# பெண்கள் சங்க ஏற்பாட்டில் இருநாட் கருத்தரங்கு

(தென்மராட்சி)

கண்டியைத் தலைமையகமாக் கொண்ட போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கம் எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் யாழ். பீச் இன்னில் "பாதிக்கப்பட்ட மனங்களை ஆற்றுதல்" என்னும் தலைப்பில் இருநாள் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதான நடைமுறைகளை தக்கவைக்கும் வகையில் எவ விதமான பங்களிப்புக்களைச் செய்ய முடியும் என்பது பற்றி இவ் இருநாள் கருத்தரங்கில் விரிவாக ஆராயப்படவுள்ளது என. இச்சங்கத்தின் முக்கிய பரமுகரான விசாகா தர்மதாசா தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கிக்ற்கு மாகாண மட்டத்தில் செயல்படும் ஊடகவியலாளர்கள், மதவாதிகள் மற்றும் அரசியல்வாதிகள் அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (உ-77)

## பாம்பு தீண்டி மரணமான

# சிறுவனின் வீட்டிற்கு அமைச்சர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

உறங்கிக் கொண்டிருந்தவேளை பாம்பு தீண்டி மரணமான குருநகர் பகுதி சிறுவனின் வீட்டிற்கு நேரில் சென்ற அமைச்சர் தி. மகேஸ்வரன் அக்குடும்பத்தின் ஏழ்மை நிலையைப் போக்கும் வகையில் நிதி உதவி அளித்துள்ளார்.

கடந்த புதன்அன்று குருநகர் பகுதிக்கு தினது பணிநிமிர்த்தம் சென்ற அமைச்சர் அப்பகுதியைச் சேர்ந்த சேவியர் நேரியல்யோன் அஜந்தன் (வயது 12) என்ற சிறுவன் உறக்கத்திலிருந்தவேளை பாம்புக்கடிக்கு இலக்காகி மரணமான சம்பவம் பற்றி அறிந்ததை அடுத்து சம்பந்தப்பட்ட வீட்டிற்கு நேரில் சென்றார்.

அங்கு சென்ற அமைச்சர் மரணமான சிறுவனின் வீடு எந்த வித அடிப்படைவசதிகளோ பாதுகாப்போ அற்றதாக இருக்கக் காணப்பட்டதை அடுத்து அந்த வீட்டில் உள்ளவர்களின பாதுகாப்பை உறுதி செய்யும் விதத்தில் ஒரு தொகை நிதியை அளித்தார். (உ-4)

## மணவாளக் கோலவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் மணவாளக கோலவிழாவும், சகஸ்திர சங்காபிஷேகமும் இன்று மு.ப 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-10)

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப்படும்

# வலம்புரி

## மூதூர் கலவரம்

மூதூரில் தமிழ் முஸ்லிம்களிடையே கலவரம் வெடித்துள்ளமை துரதிஷ்டமான சம்பவமாகும். முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹ்ரூபிற்கும் இடையே எழுந்த கருத்து மோதல் விரிவடைந்து தமிழ்-முஸ்லிம் கலவரமாக வெடித்திருப்பதன் பின்னணியில் இனவாத சக்திகள் இருப்பது புலனாகிறது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கும் வேளையில் இன ஒற்றுமையை குலைப்பதன் ஊடாக, சமாதானப் பேச்சுக்களை தோல்வியடையச் செய்வதே மூதூரில் இடம்பெற்ற இனக் கலவரத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேசம் முழுவதும் அக்கறையும், ஆர்வமும் காட்டி வரும் வேளையில் இனவாத சக்திகள் இன்னமும் ஒற்றுமைப்படாத நிலைமை மீண்டும் ஓர் யுத்தத்திற்கு வழி கோலுவதாக உள்ளது.

ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற பேரினவாத கட்சிகள் சமாதான முயற்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் தென் இலங்கையில் நடத்திவருகின்ற அதேவேளை வடக்கு கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை குலைத்து இனப்பிரச்சினைக்கான தீர்வை நாசகாரம் செய்யும் முயற்சியும் வேகமாக நடைபெற்று வருகிறது.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே கலவரத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழர்களோடு முஸ்லிம்கள் சேர்ந்து வாழ முடியாது என்ற ஓர் தோற்றப்பாட்டை சர்வதேசத்திற்குக் காட்டுவதும், இதனால் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக கலந்து கொண்டு அவர்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளதென்பதை சர்வதேசத்தின் பார்வையில் தென்படவைப்பதுமே மூதூர் இனக் கலவரத்தின் பின்னணி ஆகும்.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாகக் கலந்துகொள்ள முடியாதென விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியதை அடுத்து, அமைச்சர் ரவூப் ஹக்கீம் குழம்பிப் போனதும் அச் சமயம் பார்த்து முஸ்லிம்களின் உரிமைகள் விடயத்தில் அமைச்சர் ஹக்கீம் சரியான முறையில் செயற்படவில்லை என ஆளும் கட்சியின் முஸ்லிம் எம்.பி. மஹ்ரூப் குற்றம் சுமத்தியதும் திட்டமிடப்படாத செயலன்று.

அதாவது அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக கலந்து கொள்ள வேண்டும். இல்லையேல் சமாதான முயற்சியைக் குழப்ப வேண்டும். இதுவே முஸ்லிம் கட்சிகளின் தற்போதைய நிலைப்பாடாகும். இதனை நிறைவேற்றும் பின்னணியிலேயே மூதூர் கலவரம் ஏற்படுத்தப்பட்டுள்ளதெனின் அது மிகையன்று.

### நீண்ட கால சர்வாதிகாரத்துக்குப் பின்

# ஈராக் மக்கள் ஜனநாயகத்தை உருசிக்கத் தொடங்கியுள்ளனர்

ஈராக்கில் ஜனநாயக அடிப்படையில் புதிய அரசை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய முதற் கூட்டம் நடந்துள்ளது. அமெரிக்காவின் ஓய்வு பெற்ற தளபதி கார்னர் முன்னிலையில் நடந்த இக்கூட்டம் இனி நடக்கப்போகிற பல பூர்வாங்க கூட்டங்களில் ஒன்று. 'ஈராக்கின் தலைவர்கள் ஈராக்கியரால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அன்னியரால் திணிக்கப்படலாகாது' என்று இக்கூட்ட முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கை கூறுகிறது. இது செயலளவிலும் இருந்தால் சந்தோசம் தான். அமெரிக்க இராணுவத் தலைமையகம் முன்கூட்டியே கொண்டு போய் ஈராக்கில் இறக்கிய 'ரெடிமேட் பிரதமர் அகமது சலாபி இக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை' ஷியாக்களில் ஒரு பிரிவினர் பங்கேற்கவில்லை என்பதுடன் 'சதாம் வேண்டாம், அமெரிக்காவும் வேண்டாம்' என்ற முழக்கத்துடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவற்றை முதல் கோணல் முற்றுங் கோணல் என்பதாகக் கருதிவிடக் கூடாது. எதிர்படிக்குரலை அனுமதிப்பது என்பது ஜனநாயகத்தின் முக்கிய அம்சம். அந்த அளவில் ஈராக்கில் நடைமுறையில் ஜனநாயகம் செயல்பட ஆரம்பித்துவிட்டது என்றே கொள்ள வேண்டும். ஆகவே தான் அமெரிக்கா மெல்ல அடியெடுத்து வைத்து செயல்பட ஆரம்பித்துள்ளது. கருத்தாய்வுக் கூட்டமென்று சொல்லப்படுகின்ற மேற்படிக் கூட்டம் பக்தாத்தில் நடத்தப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். ஈராக்கை சில மாதம் நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தளபதி கார்னர் இன்னும் பக்தாத்தில் அடியெடுத்து வைக்கவில்லை. பதவியதிகாரத்தை ஏற்கிற நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை. எடுத்த எடுப்பில் இப்படி நடந்திருந்தால் அது முடிசூட்டு விழாவாகக் கருதப் பட்டிருக்கும். அது ஈராக்கிய மக்களிடையே தவறான எண்ணத்தை உண்டாக்கியிருக்கும். இந்த அச்சத்தில் தான் கருத்தாய்வுக் கூட்டம் ஈராக்கின் ஒரு பண்டைய நகரில் புராதனச் சின்னம் அருகே நடத்தப்பட்டது.

உண்மையில் ஈராக்கில் வெவ்வேறு தரப்பினரின் கருத்தை அறிய வேண்டிய அவசியம் உள்ளது. ஈராக் நாட்டில் குர்துக்கள், சன்னிகள், ஷியாக்கள் (அனைவரும் முஸ்லிம்களே) என 3 பிரிவினர் உள்ளனர். ஜனநாயகக் கட்டமைப்பை உருவாக்க இந்த 3 பிரிவினரிடையே இணக்கம் காணப்பட்டாக வேண்டும். நாட்டின் பெருவாரியானவர்கள் என்ற முறையில் அரசு அமைப்பில் தங்களுக்கு உரிய பங்கு இருக்க வேண்டும் என்று ஷியாக்கள் விரும்புவர். இதுவரை கையோங்கிய நிலையில் இருந்து வந்துள்ள சன்னிப் பிரிவினர் தங்கள் குரல் மங்கிவிடுமோ என்று அஞ்சுவது இயற்கை. நீண்ட காலமாக சுயாட்சி உரிமை கோரும் குர்துக்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்துவர்.

இந்த 3 பெரும் பிரிவினரின் நலன்களையும் காப்பதற்கு தக்கதொரு ஏற்பாட்டை உருவாக்க எவ்வளவோ வழிகள் உள்ளன. சின்னஞ்சிறிய தீவு நாடான பிரிட்டனில் வடக்குப் பகுதியில் வாழும் ஸ்கொட்லாந்து மக்களுக்கு தனி நாடாளுமன்றமே ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வளவு போவானேன். இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வாழும் மக்களின் நலன்களைக் காக்க இந்திய அரசியல் சட்டததில் தனி ஏற்பாடுகள் உள்ளன. ஆகவே ஈராக்கில் உள்ள பிரச்சினைகள் தீர்க்க முடியாதவை அல்ல.

#### நல்ல அம்சம்

ஈராக், ஆப்கானிஸ்தான் போன்று பழமை போக்கு கொண்டது அல்ல. சதாம் மீது ஆயிரம் சொன்னாலும் அவரது ஆட்சி முற்போக்கானதாகவே இருந்து வந்தது. அரசியலில் மதத்தைக் கலக்க அவர் ஒரு போதும் அனுமதித்ததில்லை. முல்லாக்கள் மூலையில் உட்கார வைக்கப்பட்டனர். மதத் தீவிரப் போக்கு ஈராக்கில காணப்படாத ஓர் அம்சம். அது மட்டுமல்ல. ஈராக்கில் மெத்தப் படித்தவர்கள் நிறையவே உள்ளனர். அணுசக்தி விஞ்ஞானிகள், எண்ணெய் வள நிபுணர்கள், விவசாய நிபுணர்கள் என பெரிய நிபுணர் பட்டாளமே உள்ளது. சதாம் ஆட்சியின் போது வெளிநாடுகளுக்குப் பயந்து ஓடிய பல நிபுணர்களின் சேவையும் ஈராக்கிற்கு இப்போது கிடைக்கும் இந்த அம்சங்கள் ஈராக்கில் ஜனநாயக அத்திபாரமிட 'நல்ல அடித்தளகற்கள்'

#### அரசியல் சட்டம்

வருகிற நாள்களில் ஈராக்கில் முதற்படியாக அரசியல் சட்டம் உருவாக்கப்படவேண்டும் அதனடிப்படையில் நாடாளுமன்றம் ஏற்பட வேண்டும். அதற்கான தேர்தல்களை நடத்தியாக வேண்டும். இப்படியாக பல கட்டங்களை தாண்டிய பிறகே ஈராக்கில் ஜனநாயக ஆட்சி மலரும். இப்பொழுது சீர்குலைந்து நிற்கும் ஈராக்கை தூக்கி நிறுத்த நிறைய செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கு பல மாதங்கள் ஆகலாம்.

என்.ராமதுரை

மிக நீண்ட சர்வாதிகார ஆட்சியிலிருந்து விடுபட்டுள்ள மக்கள் இப்போது ஜனநாயக உரிமைகளை உருசிக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் தேசிய உணர்வுடன் ஒன்றுபட்டு செயற்பட்டால் அவர்களை எந்தச் சக்தியாலும் அடக்கியாள முடியாது. நீண்ட பாரம்பரியம் கொண்ட அந்த மக்களுக்கு ஜனநர்யகப் பரீட்சையில் தேற இப்பொழுது வாய்ப்புக் கிட்டியுள்ளது.

ஈராக் மீதான போர் அதன் எண்ணெய் வளத்தைக் கவர்ந்து கொள்வதற்கு அல்ல என்றும், ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கே என்றும் கூறிவந்த அமெரிக்காவுக்கு அதை நிரூபிக்க இப்பொழுது நல்லதொரு வாய்ப்புத் தோன்றியுள்ளது. அப்படிச் செய்யாமல் 'பொம்மை' ஜனநாயகத்தை ஏற்படுத்த முயன்றால் இறுதியில் அது இன்னொரு சர்வாதிகாரி தோன்றவே வழிவகுக்கும். (பி)

# யாழ். ஆஸ்பத்திரி சிறுவர் பிரிவை சீரமைக்க 10 ஆயிரம் டொலர்

### ஐ.நா. நல்லெண்ணத் தூதுவர் ஜொலி வழங்குவார்

(கோட்டை)

இலங்கையில் இரண்டு தசாப்தங்களாக நடைபெற்றுள்ள போரினால் சீர்குலைந்து போயுள்ள மக்கள் வாழ்வு குறித்த செய்திகளைக் கேட்டுத் தாம் மனம் கலங்கிப் போனதாக அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்துவிட்டு கொழும்பு திரும்பிய ஐ.நா. அகதிகள் அமைப்பின் தூதுவரான ஹொலிவூட் நடிகை அஞ்சலினா ஜொலி நிருபர்களிடம் கூறினார்.

இலங்கையில் அமைதி முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும்படி சர்வதேச சமூகத்தினை அவர் கேட்டுக் கொண்டார்.

வடக்கில் 500 பேர் அடங்கிய அநாதைகளான சிறுமிகளை சந்தித்ததாகவும் அவர்கள் எவருமே எதிர்காலத்தில் தாய்மாராய் மாறுவதற்கு விரும்பவில்லையென்று கூறியமை தமக்கு ஆச்சரியமாகவிருந்ததென்றும் ஜொலி கூறினார்.

அந்தச் சிறுமிகள் வளர்ந்த பிறகு தாய்மாராய் மாறாமல் டாக்டர்களாகவும், ஆசிரியர்களாகவும் மாறவே விரும்புவதாகத் தெரிவித்தனர் என்றும் இது தமக்கு ஆச்சரியமாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

1999ஆம் ஆண்டு 'கேர்ல் இன்ரெரப்டட்' என்ற நாடகத்தில் நடித்தமைக்காக அகடமி விருது பெற்றவரான அஞ்சலா ஜொலி ரொம் றொய்டர் என்ற படத்தில் லாராகு ரொப்ட் என்ற பாத்திரத்தில் நடித்து அப்படத்தின் பெரு வெற்றிக்கு காரணமாகவிருந்தார்.

யாழ்ப்பாண வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான பிரிவொன்றினை மறுசீரமைப்பதற்காக தம் தரப்பில் குறைந்தது 10 ஆயிரம் டொலர் வழங்கப் போவதாகவும் ஜொலி தெரிவித்தார்.

27 வயதான நடிகை ஜொலி ஐ.நா. அகதிகளுக்கான ஆணையத்தின் நல்லெண்ணத் தூதுவராக ஏற்கனவே பல நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

லத்தீன் அமெரிக்கா மற்றும் கம்போடியா, ஆபிரிக்க நாடுகளுக்கும் அவர் ஐ.நா.வின் அமைதித் தூதுவராக சென்றுள்ளார்.

கம்போடிய சிறுவன் ஒருவனை வளர்ப்புப்பிள்ளையாக தத்தெடுத்துள்ளார். (பி)



## பெண்வேடத்தில் கொள்ளை

(கோட்டை)

வெள்ளவத்தைப் பகுதியில் பல வீடுகளில் பெண் வேடத்தில் சென்று திருடி வந்த நபர் ஒருவரை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

வெள்ளவத்தையிலும், வேறு இடங்களிலும் இந்நபர் 1.5 மில்லியன் பெறுமதியன நகைகளைக் களவாடியிருப்பது தெரியவந்துள்ளது.

இந்நபரிடமிருந்து வெளிநாட்டுக் கரன்சி நோட்டுக்கள் தங்க நகைகள், ஒலிப்பதிவு நாடாக்கள், ரி.வி. செட்டுகள் மற்றும் பெறுமதியான பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர். இந்நபர் போதைக்கு அடிமையென்பதால் தினமும் 3000 ரூபாய் செலவு செய்பவர் என்றும் பொலிஸார் கூறியிருந்தார்கள். (பி)

### திசரி தியானம்

## வாழ்க்கை நெறி

ஒவ்வொருவரும் தேனீயைப் போலச் சலிப்பின்றி ஆர்வத்துடன் பணியாற்ற வேண்டும். செய்ய வேண்டிய பணியை விருப்பத்துடன் மனதாரச் செய்யின் அடைய வேண்டிய இலட்சியப் பாதைக்கு அது இட்டுச் செல்லும். சேவை ஒன்றே குறிக்கோளாக இருக்க வேண்டும். சேவை செய்ய வாய்ப்புக் கிடைக்கும் சமயத்தை நழுவ விட்டு விடாதீர்கள். இது தான் உங்கள் இலட்சியம். முடிவில்லாத பரந்த மனப்பான்மை இதில் இருக்கிறது. பகவான் கிருஷ்ணன் எவ்வளவு அரிய பெரிய தொண்டாற்றினார். அதுவே உங்களது வாழக்கை நெறியாக இருக்க வேண்டும்.

சுவாமி சிவானந்தர்

## தவக்கால நற்சிந்தனை

"அல்லேலூயா!அல்லேலூயா!அல்லேலூயா!"

இயேசுவின் இறப்பு-உயிர்ப்பு நிகழ்ச்சியின் உட்பொருளை நாம் முழுமையாய் உணர்ந்து கொள்ள அவரது வார்த்தைகளை நினைவில் வைத்திருப்பது மிகவும் முக்கியம். தாங்கள் ஆயத்தம் செய்திருந்த நறுமணப் பொருட்களை எடுத்துக் கொண்டு பெண்கள் சிலர் இயேசுவின் கல்லறைக்குச் செல்கின்றனர். அவரின் உடலை அங்கு காணாததால் குழம்பிப் போகின்றனர். இக்குழப்பத்திற்குக் காரணம் இயேசு கூறிய வார்த்தைகளை அன்னை மரியாளைப் போன்று மனதில் பதித்து வைக்காததே (லூக்2:51)என்பது வானதூதர் கூற்றிலிருந்து புலனாகிறது. அவ்வாறே இயேசுவும் சீடர்களைக் கடிந்து கொள்கிறார். (லூக் 24:44-47) உயிரோடு இருப்பவர் கல்லறையில் இல்லை. மாறாக அவர் வார்த்தையில் என்றும் வாழ்கிறார்.இறைவார்த்தையில் இணைந்திராத காரணத்தாலே திருத்தூதர்கள் உயிர்ப்பின் நற்செய்தியைக் கேட்டு அது வெறும் பிதற்றல் என்று எண்ணினர். பேதுரு கல்லறையில் நுழைந்தும் வெறும் வியப்பில் ஆழ்ந்தாரே தவிர நம்பிக்கை கொள்ளவில்லை. இயேசுவின் வார்த்தைகளை நினைவுக்குக் கொண்டு வந்து நம்பியவர்கள், நற்செய்தியை அறிவிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். இறை வார்த்தையில் நம்பிக்கை வைத்து அதை வாழ்வாக்கும் கிறிஸ்தவர்களே. மறை பொருட்களின் உண்மைகளை உளளூர உணர முடியும். குறிப்பாக இயேசுவின் இறப்பு-உயிர்ப்பின் வல்லமையை அனுபவிக்க முடியும்.

காவலன்

## போர்க் கைதிகளான படையினர் எவரும் புலிகள்வசம் இல்லை

### ச.செ.சங்கத்திடம் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் வசம் படையினர் எவரும் இல்லையென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

அத்துடன் போர் நிகழ்ந்த பகுதிகளில் காணப்படும் தடயங்களைக் கொண்டு டி.என்.ஏ பரிசோதனை மூலம் காணாமற்போனதாகக் கருதப்படுபவர்களின் விபரங்களை அறியவும் நடவடிக்கை எடுக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் ஐ.சி.ஆர். சியிடம் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், சுதா மாஸ்டர், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், ஐ.சி.ஆர்.சியின் கொழும்புப் பிரதிநிதி மார்க்ஸ் புருடன், வன்னிப் பிரதிநிதி மாரிகிளாயர் ஆகியோர் அண்மையில் வன்னியில் நடத்திய சந்திப்பு ஒன்றிலேயே மேற்படி விடயங்கள் குறித்து புலிகள் இவ்வாறு கருத்தக் கூறியுள்ளனர்.

கைதிகள் பரிமாற்றத்தின் போது இறுதியாக புலிகள் வசமிருந்த படையினர் அனைவரும் விடுவிக்கப்பட்டமை குறித்து ஐ.சி.ஆர். சியின் பிரதிநிதியின் கவனத்திற்குக் கொண்டுவந்த புலிகள் தம்மிடம் எந்தவொரு படைத்தரப்பினரும் இல்லையென திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். (உ)

---

**பிரதேச.....**

வந்த இனம்தெரியாத மூவர் கொண்ட குழுவினர் அவரை அழைத்து உரையாடிவிட்டு கைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர். சம்பவத்தை அறிந்து ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற அககரைப்பற்றுப் பொலிசார் சடலத்தை மீட்டு அககரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர ஈ.பி.டி.பி அனுசரணையுடன் சுயேட்சைக் குழுவாக போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

---

**முஸ்லிம்களை.........**

யில் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவைக்கூட மீள் பரிசீலனை செய்ய வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அரசின் சார்பில் இப்பிரதேசத்துக்கு வந்த அமைச்சர்களிடம் எமது நிலைப்பாடு தொடர்பாக விளக்கிக்கூறியுள்ளோம். மூதூர்ப் பகுதிகளில் வாழுகின்ற சகல இன மக்களினது பாதுகாப்பையும் குறிப்பாக முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசை வற்புறுத்திக் கேட்டுள்ளோம் இது விடயத்தில் அரசு நடவடிக்கை எடுக்கத்தவறுமாயின் எனது அமைச்சுப் பொறுப்பை துறப்பதுடன் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவையும் விலக்கிக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்றும் ரவூப் ஹக்கீம் எச்சரிக்கைவிடுத்தார்.

அரசாங்கம் பாதுகாப்புக் கருதி படைகளைக் குவித்திருந்த போதும் விடுதலைப்புலிகள் தரப்பில் ஒத்துழைப்புக் கிடைக்காது போனால் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு கேள்விக்குரியதாகவே இருக்கும் இந்நிலையில் புலிகள் அரசுடனும், எம்முடனும் இவ்விடயத்தில் இணைந்து செயற்பட வேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து வந்து முஸ்லிம் மக்கள் தாக்கப்படுவது நிறுத்தப்படவேணடும் என்றும் ஹக்கீம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். (ம)

---

**கூட்டணி......**

வுள்ளது.

இச்சந்திப்பில் தொடரும் சமாதான முயற்சிகள், கட்சியின் சமகாலப் பிரச்சினைகள், உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் குறித்து ஆராயப்படலாம் என்று தெரிய வருகிறது.

இதேவேளை புலிகளுடனான இன்றைய சந்திப்பில் கூட்டணியின் சிரேஷ்ட தலைவரும் யாழ் மாவட்ட எம்பியுமான வி. ஆனந்தசங்கரி தனிப்பட்ட விஜயமாக லண்டன் சென்றிருப்பதால் கலந்து கொள்ளமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

---

**சாவகச்சேரியில்.....**

பிரதேசசெயலர் எஸ்.கேதீஸ்வரன் உட்பட பிரதேச செயலக உயர் அதிகாரிகள் மற்றும் தென்மராட்சிப்பகுதி கிராம சேவையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்செயலமர்வில் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டவர்கள் மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவுகள் இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் ஆகியோரின் பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை இச்செயலமர்வில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் நேரடியாகக் கலந்துகொண்டு மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அதனைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளார். (இ)

---

**ஈரவிழிகளுடன் 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

## சவுதி அரேபிய பிரதிநிதிகள் நேற்று யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இஸ்லாமிய நிவாரண அமைப்பின், சவுதி அரேபிய பிரதிநிதிகள் இருவர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

யாழ் வந்த அமைப்பின் பணிப்பாளர் டாக்டர் சுலைமான் அல்சுக்கிம், சவுதி அரேபிய பொதுசனதொடர்பாடல் பொறுப்பதிகாரி முதர் அசல்லேயி ஆகிய இருவரும் புதிய பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டனர்.

தொழுகையைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டில் மீளக் குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் ஆடைகள் என்பனவற்றை வழங்கினர்.

இந் நிகழ்வில் யாழ் அரச அதிபர் எஸ்.பத்மநாதன், அகில இலங்கை மார்க்க அறிஞர் எம்.எம்.எ.முபாரக்மதனி, மற்றும் அரச அதிகாரிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். (இ-4)

## துப்பாக்கிகள் சட்டம் கடும் அமுல்

(கொழும்பு)

துப்பாக்கிகள் கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்கள் கடுமையாக அமுல் செய்யப்பட இருப்பதாக உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

ஆயுதங்களின் தாராளமான புழக்கத்தையும் பயன்பாட்டையும் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். துப்பாக்கிகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது தனிநபர் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட உள்ளன.

பயிர்களை விலங்குகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள விரும்பும் விவசாயிகளுக்கு மாவட்டச் செயலாளர்களின் அனுமதியுடன் துப்பாக்கி அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் என்றும் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-8)

---

**கட்டைபறிச்.......**

எம்.எஸ்.தௌபீக்,திடீர் தௌபீக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லிம் எம்பிக்கள் கடத்தப்பட்ட இரு முஸ்லிம்களையும் விடுவிக்குமாறும் அவ்வாறு விடுவிக்கப்பட்டால் மட்டுமே அமைச்சர் ரவூப் ஹக்கீமையும் அவரது குழுவினரையும் மூதூரை விட்டுச் செல்ல அனுமதிக்கமுடியும் என்றும் தெரிவித்திருந்தனர்.

இதற்குப் பதிலளித்த தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்கள் இக் கடத்தல் சம்பவத்துக்கும் தங்களுக்கும் தொடர்பில்லையென விடுதலைப்புலிகள் தெரிவித்திருப்பதைக் கூறினர்.

இந் நிலையில் முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் கூட்டம் முடிவடைந்துள்ளமையால் அங்கு தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகிறது. இதனால் அப் பகுதியில் மீண்டும் நேற்று மாலை 6மணிமுதல் இன்று காலை 6மணி வரை ஊரடங்கு சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை அப்பகுதியில் உள்ள தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி இடம்பெயர்ந்துள்ளன.

சுமார் 250 தமிழ்க் குடும்பங்கள் எம்கார் அந்தோனியார் பேரா

## மனிதவள அபிவிருத்திப் பயிற்சி

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் மனிதவள அபிவிருத்திப் பயிற்சி நெறிகளான மரவேலை, மேசன் வேலை, ஆகிய ஆறு மாத காலப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பயிற்சி நெறிக் காலத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்பட உள்ளது.

இப்பிரதேச செயலகப்பகுதியில் உள்ள பதினெட்டு வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் இப் பயிற்சி நெறிகளை மேற்கொள்ள முடியுமென கரவெட்டிப் பிரதேச செயலகர் எஸ்.கனகரத்தினம் அறிவித்துள்ளார். (உ-52)

## மலேசியா ரெலிகொம் நிறுவனம் மேலும் 9கோடி டொலர் முதலீடு

(கொழும்பு)

மலேசியா ரெலிக்கொம் நிறுவனம் இலங்கையில் தொலைத்தொடர்பு மற்றும் இணைய உட்கட்டமைப்பினை ஏற்படுத்த ஒன்பது கோடி அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் ரெலிக்கொம் நிறுவனமும் இலங்கை முதலீட்டுச் சபையும் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளன.

இதனடிப்படையில் மலேசிய ரெலிக்கொம் நிறுவனத்தின் உப நிறுவனமான டயலொக் ஜீ.எஸ்.எம் அமைப்பின் இலங்கைக்கான மொத்த முதலீடு 2000 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது.

மேற்படி ஒன்பது கோடி டொலர் முதலீட்டைக் கொண்டு தொலைத் தொடர்பு அமைப்புக்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் கிளை நிலையங்களும் அதிகரிக்கப்பட உள்ளதாக டயலொக் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜயசூரிய தெரிவித்துள்ளார்.(உ-8)

## அம்புலன்ஸ் வண்டிகளில் சுகாதார அதிகாரிகள் சவாரி

(கொழும்பு)

உலக சுகாதார நிறுவனத்தினால் அண்மையில் வழங்கப்பட்ட எட்டு அம்புலன்ஸ் வண்டிகளில் மூன்றினை வடக்கு கிழக்கு சுகாதார அமைச்சை சேர்ந்த சுகாதார அதிகாரிகள் தமது தனிப்பட்ட பாவனைக்கு பாவித்து வருவதாக தமிழ்க் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சுகாதார அமைச்சுக்கு கடிதமூலம் முறைப்பாடு செய்துள்ளார்.


இம் மூன்று அம்புலன்ஸ் வண்டிகளையும் அவ் அதிகாரிகள் தமது பாவனைக்கு ஏற்ற வகையில் அவ்வண்டிகளில் பொருத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களை நீக்கியுள்ளதுடன் தமது வசதிக்கு ஏற்றவகையில் மேலதிக இருக்கைகளையும் பொருத்தி தமது சொந்தப் பயணத்திற்கான சொகுசு வாகனமாகப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மூன்று அம்புலன்ஸ் வண்டிகளையும் இவர்கள் பயன்படுத்திவருவதால் வவுனியா மற்றும் கிழக்கின் இரு மாவட்டங்களுக்கு அம்புலன்ஸ் வண்டிகள் இன்னும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## உதவிவழங்கும் நாடுகளின்

## நினைவஞ்சலி

தாயின் மடியில் 02 ✦ 08 ✦ 1948



ஆண்டவன் அடியில் 05 ✦ 06 ✦ 1996

அமரர் திரு.பொன்னர் வெற்றிவேலாயுதம் (விஜயன்)
(முன்னாள் யாழ் செயலக வெளிக்கள உத்தியோகத்தர்)

**அன்பின் திருவுருவாய்**
**அணையா அகல் விளக்காய்**
**எம் இதயத்தில் ஒளிவிடும் ~**
**தந்தையே**
**உம்மை யாசிக்கின்றோம்.**

உங்கள் நினைவுகளுடன் வாடும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
மைத்துனர்மார்.

நீர்வேலி.

(6636)

கள் பாதுகாப்புக் கருதி இடம்பெ யர்ந்துள்ளன.

சுமார் 250 தமிழ்க் குடும்பங் கள் மூதூர் அந்தோனியார் பேரா லாயம் மற்றும் சட்டபூர்வப் பகுதி யிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதேவேளை நேற்று பிற்பகல் கட்டைபறிச்சானில் இனந்தெரி யாத கோஷ்டி ஒன்று மேற் கொண்ட கிரனைற் தாக்குதலில் இரண்டு தமிழர்கள் கொல்லப்பட் டனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் மகேஸ்வரன் ஜெயசங்கர் என அடையாளம் காணப்பட்டுள் ளார்.

இச் சம்பவத்தின்போது காய மடைந்த ஏழு பேர்களின் பெயர் விபரம் வருமாறு:

எஸ். பரமானந்தன், கே. சந் திரமோகன், கே. லிங்கேஸ்வரன், ஏ. குகராசா, எம். ரமணன், ஆர். உதயசங்கர், எஸ். விஜயசேகர்.

காயமடைந்த அனைவரும் தற் போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.(வ)


கல்வி நிறுவனம்

பிரிவு 3

O/L DAY CLASS
(8.30 - 2.00)
ஆரம்பம்: 21.04.2003

✦ பிரிவு 2 இற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.
✦ பிரிவு 4 மிக விரைவில்.
✦ இவ்வருடமும் 6 பிரிவு மட்டுமே.

(C/6059)


# உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கனடா

(கனடா)

யூன் மாதம் யப்பான் தலை நகர் டோக்கியோவில் நடைபெற வுள்ள இலங்கைக்கு உதவிவழங் கும் நாடுகளின் கூட்டத்தில் கனடா கலந்துகொள்ளும் என அந் நாட்டு அரசு அறிவித்துள்ளது.

தற்போது இலங்கையில் அர சுக்கும், விடுதலைப் புலிகளு க்கும் இடையில் இடம்பெற்று வரும் சமாதானப் பேச்சு வார்த்தை முன்னேற்றம் கண்டு வருவதாகவும் இதில் கனடிய அரசு திருப்தி கொண்டிருப் பதாகவும் கனடாவின் இரா ஜாங்க அமைச்சர் கருத்து வெளி யிட்டுள்ளார்

சமஷ்டி அமைப்புக் குறித்தும் மனிதஉரிமைகள் குறித்தும் இரு தரப்பினரிடையேயும் கருத்தொரு மைப்பாடு நிலவி வருவதாகவும் சமஷ்டி அமைப்பு முறையிலான தீர்விற்கு கனடிய அரசு உதவும் எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

(ம)


**MEDICAL CHECK UP**

**வைத்திய பரிசோதனை**

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

✦ 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
✦ X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழப்பாணம்.



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.